இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு
# பாதுகாவலன்
PAATHUKAVALAN
Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633
மலர் : 145 | இதழ் : 07 | திகதி : 02.05.2021 | விலை : 30.00

# வணக்கமாதத்தில் குடும்பமாக அமர்ந்து திருச்செபமாலை சொல்லுங்கள்

## யாழ் ஆயர் அழைப்பு



வைகாசி மாதம் கத்தோலிக்கர்களாகிய எமக்கு மாதாவின் வணக்க மாதமாகும். பெருந்தொற்று நோய் தீவிரமடையும் இக்கால கட்டத்தில் எமக்குத் தரப்பட்ட இவ்வணக்க மாதத்தில் குடும்பங்களாக அமர்ந்து திருச்செபமாலையைப் பக்தியாகச் சொல்லி எம்மையும் எம் நாட்டையும் முழு உலகையும் இக் கொடிய நோயிலிருந்து இறைவன் பாதுகாத்தருளுமாறு மாதாவிடம் மன்றாடுவோம்.

துயருறுவோரின் இறைவனாகிய எமது பரம தந்தை என்றும் எம்முடன் உள்ளார் என்பதை இறைவாக்கினர் எசாயா வழியாக இறைவன் எமக்கு இன்றும் வெளிப்படுத்தி வருகின்றார். "அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கின்றேன், கலங்காதே, நான் உன் கடவுள், நான் உனக்கு வலிமை அளிப்பேன், உதவி செய்வேன், என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன்" (எசாயா 41:10).

எனவே நாம் தேவையற்ற அச்ச உணர்வுகளோடு வாழாமல் வணக்க மாதத்தில் மாதாவின் பரிந்துரையை நாடுவோம். மரியன்னையின் கைகளில் எம்மையும், கொடிய தொற்றுக்குள்ளாகியுள்ள எம் உடன் பிறப்புக்களையும், இந்நோயினால் காவு கொள்ளப் பட்டவர்களின் ஆன்மாக்களுக்காகவும், இவ் அபாய சூழலில் நோயுற்றவர்களின் நல வாழ்வுக்காகப் பணியாற்றும் மருத்துவ, சுகாதார, பாதுகாப்புத் துறையினருக்காகவும், மரியன்னை வழியாக இறைவனை மன்றாடுவோம்.

# காலத்திற்கேற்ற கல்வியை வழங்க தேசிய கல்விக்குழு நிறுவவேண்டும்

## இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலய 125ஆவது ஆண்டு விழாவில் யாழ். ஆயர் வலியுறுத்தல்





*"இலங்கையில் தேசிய கல்விக் குழு ஒன்று உருவாக்கப்பட்டு அதன் ஊடாக இலங்கை மாணவர்களுக்கு பொருத்தமான கல்விச் செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவது அவசியமானது. அண்மையில் கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அவர்களைச் சந்தித்தபோது இந்த விடயத்தை நான் வலியுறுத்தினேன். அரசாங்கங்கள் மாறினாலும் கல்வி முறைமை மாற்றப் படக்கூடாது அதற்காக இந்த தேசியக் கல்விக் குழு நிறுவப்படுவது மிகவும் அவசியமானது என்பதை அவருக்கு எடுத் துரைத்தேன்."* - இவ்வாறு இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தின் 125ஆவது ஆண்டு யூபிலி விழாவில் பிரதம விருந்தி னராகக் கலந்து கொண்ட யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் : சமகாலக் கல்வி முறைமை மாணவர்களிடையே மனிதத்தைக் கட்டியெழுப்பும் கல்வி முறையாக நடைமுறைப் படுத்தப்படவேண்டும்.சிறப்பாக ஆரம்பப்பிரிவு மாணவர்களிடம் ஆடல்,பாடல் விளையாட்டு போன்ற ஆற்றல்களை விருத்தி செய்யக்கூடிய மகிழ்ச்சி நிறை கல்விமுறையை வளர்ப்பதன் மூலமே எதிர்காலத்தில் சிறந்த தலைமைத்துவப் பண்பைக் கற்றுக்கொள்ளமுடியும்.

இலங்கையில் எதிர்காலத்தில் தேசியக் கல்விக் குழு உருவாக்கப்பட்டு அதன் ஊடாக இலங்கை மாணவர்களுக்குப் பொருத்தமான கல்விச் செயற்பாடுகள் அறிமுகப்படுத் தப்படுவது அவசியமானது.அரசாங்கங்கள் மாறும்போது கல்விமுறையிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்தச் செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும். அதனை நான் கல்வி அமைச்சரிடம் எடுத்துரைத்தேன்.

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையை நான் முற்றாக எதிர்க்கிறேன். மாணவர்க ளிடம் அதிக சுமையைக் கொடுக்கும் ஒன்றாக அது உள்ளது.

சிறப்பாகக் கத்தோலிக்க பாடசாலைகளில் கல்வி மட்டுமன்றி ஆன்மீக வாழ்வை மேம்படு த்தும் செயற்பாடுகளும் அவசியம் என்றார். இந்த யூபிலி விழா அதிபர் அருட்சகோதரி சகாய நாயகி பஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. வடக்கு மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

கனிவான கவனத்திற்கு

## ஆலய வழிபாடுகளில் 25 பேர் மட்டுமே

### பொறுப்போடு கடைப்பிடிக்குமாறு யாழ் ஆயர் பணிப்பு

கொவிட் 19 நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக ஆலய வழிபாடுகளில் அதிக பட்சம் 25 பேர் மட்டுமெ கலந்து கொள்ளலாம் என்னும் ஒழுங்கு முறையை இறுக்கமாகக் கடைப் பிடிக்குமாறு யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் குருக்களுக்கும் அனைத்து இறை மக்களுக்கும் பணித்துள்ளார்.

மறு அறிவித்தல்வரை இவ் ஒழுங்கு முறையை யாழ் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் பொறுப்புடன் கடைப்பிடிக்குமாறு ஆயர் கேட்டுள்ளார்.

## பிறந்த தினத்தில் வாழ்த்தி மகிழ்கின்றோம்




மாதாவின் வணக்கமாத மைந்தனே!
யாழ் மறைமாவட்ட ஞான ஒளியே!
நடையின் நின்றுயர் நல்மேய்ப்பனே!
திருஅவைத் தூணில் ஒளிரும் ஞானப்பிரகாசமே!
இறை அருளும் மரியன்னை அருளும்
பேரருளாய் உம்மீது பொழிந்திட
நாளெல்லாம் வாழ்த்துகின்றோம்.

*பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள்*

# பேராலயத்தில் எழுச்சிபெறும் அன்பியங்கள்



யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இருபத்து நான்கு அன்பியங்கள் ஆரம்பிக்கப் பட்டு மிகச் சிறப்பாக இயங்கிவரும் நிலையில் அவற்றிற்கு பெயர் சூட்டும் நிகழ்வு 14.04.2021 அன்று பேராலயத்தில் நடைபெற்றது.

நற்கருணை வழிபாடும், அதனைத் தொடர்ந்து பெயர் சூட்டும் நிகழ்வும் நடைபெற்றன. நிகழ்வின் நிறைவில் அன்பியப் பகிர்வும் நடைபெற்றன. நிகழ்வின் நிறைவில் அன்பிய பகிர்வின் செயற்பாடாக அன்பிய கஞ்சியை அனைவரும் மகிழ்வோடு பருகினர்.

இதில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிக ளாரும், அருட்பணி ரூபன் CMF அடிகளாரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு மக்களை உற்சாகப்படுத்தினர்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## நச்சுயிரியின் தலையை நசுக்கட்டும் செபமாலை

கொரோனா உலகில் உருமாறி உலாவுகின்றது. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. பல பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்கள் திறக்கப்படவில்லை. எங்கும் கொரோனா எதிலும் கொரோனா. New Normal Life என்ற சாதாரண வாழ்க்கை முறைக் குள்ளும் கொரோனா புகுந்து விட்டது. காற்றில் பரவுவதாகவும் ஒரு செய்தி. அரசியல், ஆன்மீகம் அனைத்திலும் கொரோனாவின் தாக்கம் வீரியம் பெற்றுள்ளது. நாம் உருமாறாத காரணத்தால் கொரோனா உருமாறியது. மாற்றம் ஒன்றே மாறாதது என்பதை கொரோனா அறிந்து விட்டது போலும். நாம் தான் இன்னும் உருமாறவில்லை. அப்படியே இருக்கின்றோம். எம் பழைய வாழ்வு மாறவில்லை.

எசாயா இறைவாக்கினர் இவ்வாறு எச்சரிக்கின்றார். "என் மக்களே நீங்கள் போய் உங்கள் அறைக்குள் நுழைந்து உள்ளிருந்து கதவுகளை தாழிட்டுக் கொள்ளுங்கள். கடும் சினம் தணியும் வரை சற்று ஒழிந்து கொள்ளுங்கள். மண்ணுலகில் வாழ்வோர் தமக்கு எதிராகச் செய்த தீச்செயலுக்குத் தண்டனை வழங்க ஆண்டவர் தம் திருத்தலத்திலிருந்து புறப்படுகின்றார். மண்ணுலகம் தன் இரத்தப் பழியை வெளிக்கொணரும்" (எசாயா 26: 20-21)

பல்வேறு வடிவம் தாங்கும் கொரோனாவை கொன்றொழிக்கத் தடுப்பூசிகளால் முடியாது போகலாம். தடுப்பு மருந்துகளால் முடியாது போகலாம். முகக் கவசத்தாலும் முடியாது போகலாம். நாட்டை முடக்கி விட்டால் நான் போய்விடுவேன் என்று கொரோனா சொன்னதா? அனைத்தும் ஒரு பக்கம் இருக்க மனிதப் பேரவலத்திற்குக் காரணமான இந்த நச்சு உயிரியை நசுக்க கிறிஸ்தவர்களாகிய எம்மிடம் இரண்டு வலுவான ஆயுதங்கள் உண்டு. ஒன்று திருச்சிலுவை. மற்றையது திருச்செபமாலை. ஆனால், நாம் இவற்றை அடியில் ஆழமாக புதைத்து விட்டு அதன் மேல் ஏறி நின்று சவாரி ஓடுவதால் கொரோனா எம்மை சரிக்கட்டுகிறது.

இம்மாதம் எமது அன்னையாம் மரியாளின் வணக்க மாதம். பெரும் பெரும் இன்னல்களுக்கும், ஏக்கங்களுக்கும், அங்கலாப்புக்களுக்கும் முகம்கொடுத்துக் கொண்டிருக்கும் நாம் இம்மாதத்தையாவது பக்தியின் மாதமாக்கி, தேவதாயிடம் இந்த உலகத்தின் பேரவலம் நீங்க இறைவனிடம் பரிந்துரை செய்யுமாறு, பக்தியோடு குடும்பமாகத் திருச்செபமாலை சொல்லி மன்றாடத் தவறுவோமாக இருந்தால், ஏசாயா இறைவாக்கினரின் எச்சரிக்கை எமக்குரியதாகிவிடும்.

எமது அன்னையாகிய மரியாள் இறைவனின் தாய். இரக்கத்தின் தாய், எம் எல்லோருக்கும் தாய். அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் எங்கு தேவை இருக்கின்றதோ அங்கு சென்று தேவைகளை நிறைவேற்றி வந்தார். கானாவூர் திருமணத்தில் கனிரசம் தீர்ந்தபோது தம் மகனிடம் பரிந்துரைத்து முன்னர் பரிமாறியதை விடமேலும் இனிமை மிக்க கனிரசத்தை அருளச் செய்தார். எலிசபெத்தம்மாளிடம் சென்று அவளின் பேறு காலத்தில் அவளுக்கு ஒத்தாசை புரிந்தார். கிறிஸ்து இயேசுவின் சிலுவைப் பயணத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு சிலுவை அடியில் மிகுந்த வியாகுலத்துடன் தன் மகனுக்கு ஆறுதல் அளித்தார். இத்தகைய அன்னை எம்மைக் கை விடுவாளா? இல்லை. எமக்காகப் பரிந்துரைப்பார். எப்போது என்றால், நாம் திருச்செபமாலை சொல்லி மன்றாடும் போது நிச்சயம் அவர் எமக்காக இறைமகன் இயேசுவிடம் பரிந்துரைக்க தயங்க மாட்டார். ஆனால் நாம் இதுவரை அவரிடம் பக்தியோடு மன்றாடவில்லை என்ற கசப்பான உண்மையை ஏற்றக்கொண்டே தான் ஆக வேண்டும்.

இன்று எம் மத்தியில் செபமாலை சொல்லும் வழக்கம் அறவே அற்றுப் போய்விட்டது. செபமாலை சொல்லும் நேரத்தை தொலைக்காட்சி நாடகங்களும், ஸ்மார்ட் போன்களும் பெற்று விட்டன. செபமாலை அணிவதும், அதனை எம்முடன் வைத்திருப்பதும் பயணப் பொதிகளில் அதனைக் கொண்டு செல்வதும் முழுமையான செபமாலைப் பக்தியாகாது. எமது நேரத்தை ஒதுக்கி, பக்தியோடு குடும்பமாக, பங்கு மக்களாக செபமாலை சொல்வதுதான் அன்னையின் மீது நாம் கொண்டுள்ள உண்மையான பக்தியாகும்.

மரியாளின் மன்றாட்டு மாலையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புதிதாக மூன்று வாழ்த்தொலிகளைச் சேர்த்துள்ளார். **மரியாள் இரக்கத்தின் அன்னை, மரியாள் நம்பிக்கையின் அன்னை, மரி யாள் புலம்பெயர்தோரின் ஆறுதல்** என்பவையே அவையாகும். இன்றைய சூழலில் இவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. இரக்கத்தின் அன்னையாகிய மரியாள் எம்மீது இரக்கம் காட்டுவார். அவர் நம்பிக்கையின் அன்னையாக இருப்பதால் நம்பிக்கையோடு நாம் அவரை அணுகலாம். "மாதாவே சரணம் உந்தன் பாதாரம் புவிக்காதாரம்" என நம்பிக்கையோடு அவரிடம் சரணடைவோம். நாம் இன்று உடலளவில் புலம்பெயரா விட்டாலும் உள்ளத்தளவில் எமது மனங்கள் உலகப் போக்குகளிலும், கொள்ளை நோயின் பயங்கரத்திலும் புலம்பெயர்ந்திருக்கிறது. இந்நிலையில் அன்று எலிசபெத்தம்மாளுக்கு ஆறுதல் அளிக்கச் சென்ற எம் அன்னையாகிய மரியாள் எமக்கு ஆறுதலாக எம்மோடு துணையிருப்பாள்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், எமது யாழ் மறைமாவட்ட ஆயர் அவர்களும் கத்தோலிக்க மக்களிடம் ஒரு அழைப்பை விடுத்திருக்கின்றனர். **"வைகாசி மாதம் குடும்பமாக அமர்ந்து செபமாலை சொல்லுங்கள். இறைவன் இந்தப் பயங்கரமான கொள்ளை நோயிலிருந்து உலகத்தையும் எங்கள் குடும்பங்களையும் காத்தருளுமாறு மீண்டு பழைய நிலைமை தோன்றி நாங்கள் மகிழ்ச்சியாக வாழ, சொல்லும் இந்தச் செப-மாலை வழியாக இறைவரம் வேண்டுவோம்"** என்பதே அவ் அழைப்பாகும். இவ் அழைப்பை அசட்டை செய்யாமல் கருத்துடன் ஏற்று, ஐம்பத்து மூன்று மணிகளைக் கையிலேந்தி கொரோனாவை சங்காரம் செய்வோம். நோவாவின் பேழை-யாக மிதக்கப்போகின்றோமா? பாபேல் கோபுரமாக சரியப் போகின்றோமா? வணக்க மாதத்தில் நாம் சொல்லும் செபமாலை நச்சுயிரின் தலையை நசுக்கட்டும்.

# இந்தியாவில் கத்தோலிக்கப் பாடசாலைகள் தற்காலிக மருத்துவ மனைகளாக

கொவிட்-19 பெருந்தொற்றின் இரண்டாவது அலை, இந்தியாவில் கடும் நெருக்கடியை உருவாக்கியுள்ள வேளையில் பெங்களூரு உயர் மறைமாவட்டம், கத்தோலிக்கப் பள்ளிகளைத் தற்காலிக மருத்துவ மனைகளாகப் பயன்படுத்த முன்வந்துள்ளது.

இந்த 2வது அலையின் வீரியத்தால், மருத்துவத் துறையினர் சந்தித்துவரும் நெருக்கடியை உணர்கிறோம் என்று கூறிய பெங்களூர் பேராயர் பீட்டர் மச்சாடோ அவர்கள், இந்த நெருக்கடியைக் குறைப்பதற்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்யும் நோக்கத்தில், பள்ளிகளை, மருத்துவ மனைகளாக மாற்றிவருகிறோம் என்று கூறினார்.

கொவிட் கிருமிக்கு எதிராக, மிக அவசரமான, முக்கியமான சிகிச்சைகளை மருத்துவ மனைகளில் முதலில் பெற்று, ஓரளவு சக்தி அடைந்துள்ள நோயாளிகள், இரண்டாம் நிலைச் சிகிச்சைகளைப் பெறுவதற்கு, பாடசாலைகளில் உருவாக்கப்படும் ஏற்பாடுகள் உதவியாக இருக்கும் என்று பேராயர் மச்சாடோ அவர்கள் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பெருந்தொற்றின் வீரியத்தைக் கட்டுப்படுத்தாமல் போனால், இன்னும் மிக நெருக்கடியான சூழல்களைச் சந்திக்கவேண்டியிருக்கும் என்று தான் அஞ்சுவதாக, புனித யோவான் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் இயக்குநர், அருட்பணி பால் பரத்தாழம் அவர்கள் கூறியுள்ளார்.

'கிறிஸ்தவ மறைப்பணி மருத்துவ மனைகள்' என்ற ஒரு கூட்டு முயற்சியின் வழியே, இந்தப் பெருந்தொற்று நேரத்தில், மிக வறுமையுற்றோருக்கு உதவிகள் செய்வதில், புனித மார்த்தா மருத்துவமனை ஈடுபட்டிருப்பதாக, இம்மருத்துவமனையின் தலைவர், அருட்சகோதரி கிரேசி தாமஸ் அவர்கள், பீதேஸ் செய்தியிடம் கூறினார்.

# அருளாளர் தேவசகாயம் உட்பட ஏழு புதிய புனிதர்கள்

அருளாளர் தேவசகாயம் உட்பட, திருஅவையின் ஏழு அருளாளர்களைப் புனிதர்களாக உயர்த்துவது அதற்குரிய நாளை நிர்ணயிப்பது, ஆகியவை குறித்து விவாதிக்க, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மே மாதம் 3ம் திகதியன்று, கர்தினால்கள் அவையை கூட்ட உள்ளதாக, திருப்பீடம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் கன்னியாகுமரி மாவட்டத்தில் மறைசாட்சியாகக் கொல்லப்பட்ட அருளா-ளர் தேவசகாயம் அவர்கள் உட்பட 7 பேருக்கு புனிதர் பட்டம் வழங்குவது குறித்து கர்தினால்கள் கலந்துரையாடி உள்ளனர்.

இந்த ஏழு அருளாளர்களுள் தேவசகாயம் மட்டுமே பொதுநிலையினர், ஏனைய ஆறு பேரில் நால்வர் அருட்பணியாளர்கள் மற்றும் இருவர் பெண்துறவிகள்.

# "போர்களை நாம் எவ்வாறு தடுத்து நிறுத்தப் போகிறோம்? -திருத்தந்தை

உலகில் அமைதி, பாதுகாப்பு, மகிழ்ச்சி போன்றவை நிலவுவதற்கு, எந்த ஒரு நாடும், தனித்து நின்று சாதிக்கமுடியாது. மாறாக, உலகநாடுகளின் ஒன்றிணைந்த முயற்சியாலேயே அந்த இலக்கை எட்டமுடியும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

"ஆயுதமோதல்களை நாம் எவ்வாறு தடுத்து நிறுத்தப்போகிறோம்? எந்த மக்களும், எந்த ஒரு சமுதாயக் குழுவும், எந்த வொரு தனிப்பட்ட நபரும், உலகில், அமைதி, வழமை, பாதுகாப்பு மற்றும் மகிழ்ச்சியை நிலவச்செய்ய இயலாது. நாம் எல்லோரும் உலகளாவிய குழுமம். அனைவரும் ஒரே படகில் உள்ளோம் என்ற விழிப்புணர்வை கொவிட்-19 பெருந்தொற்று கற்றுக்கொடுத்துள்ளது" என்ற சொற்கள் திருத்தந்தையின் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# இறைவேண்டலில் நம்பிக்கை வைப்பதே மக்களின் வலிமை

உலகெங்கும் பரவியுள்ள கொவிட்-19 பெருந்தொற்று முடிவுக்கு வரவேண்டும் என்ற வேண்டுதலுடன் மே மாதம் முழுவதும் உலகின் அனைத்துத் திருத்தலங்களிலும் செபமாலைப் பக்தி முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும் என்று வத்திக்கான் செய்தித்துறை கூறியுள்ளது.

ஆபத்துக் காலங்களில் திருச்செபமாலை இறைவேண்டலின் வல்லமையை வெளிப்படுத்துகின்றது. திருத்தந்தையின் இந்த அழைப்பு கிறிஸ்தவத்தின் தொடக்ககாலத்திலிருந்தே கிறிஸ்த வர்கள் ஆபத்துக் காலங்களில் அன்னை மரியாவின் பரிந்துரைக்காக மன்றாடியதையும் நினைவுபடுத்துகின்றது.

மருத்துவமனை அறைகளில், கண்ணுக்குப் புலப்படாத பெருந்தொற்று கிருமி, நோயாளிகளின் மூச்சுவிடும் திறனை மெல்ல மெல்ல இழக்கச்செய்யும்போது அல்லது மருத்துவமனைகளில் இடமில்லாமல் தெருக்களிலே துன்புறும்நிலை ஏற்படும் போது இறைவேண்டல் செய்வது உற்ற துணையாக இருக்கும் என்றும் அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

**வாக்குறுதி**

குழுமமாக இணைந்து பொதுவில் எழுப்பும் இறைவேண்டல் பற்றி சந்தேகமோ அல்லது அது பற்றிய தவறான வழிநடத்தலோ ஏற்பட்டுள்ளவேளைகளில் "உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார்" (மத்.18: 19) என்று மத்தேயு நற்செய்தியில் கூறப்பட்டுள்ள, இயேசுவின் திருச்சொற்களை நினைவுகூரலாம்.

இறைவேண்டல் பற்றிய இந்த வாக்குறுதி, நமக்காக இறைத்தந்தையிடம் பரிந்துபேசுபவராகிய, அன்னை மரியாவின் மகனாகிய இயேசுவிடமிருந்து வந்துள்ளது என்றும், இதுவே இறைவேண்டலின் வல்லமையைக் காட்டுகிறது.

மரியா கடவுளின் தாய் என்று பழங்கால எபேசு பொதுச்சங்கத்தால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னரே "இறைவனின் புனித அன்னையே! உமது பாதுகாவலில், உம் அடைக்கலத்தை நாடுகின்றோம்" என்று குறைந்தது 1,800 ஆண்டுகளாக திருஅவை இறைவேண்டல் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு வத்திக்கான் செய்தித் துறை குறிப்பிட்டுள்ளது.

**மே மாதம் முழுவதும் செபமாலை**

"திருஅவை முழுவதிலுமிருந்து இறை-வனை நோக்கி இடைவிடாத செபம் எழுந்தது" என்ற தலைப்பில் நடைபெறும் இந்த உலகளாவிய முயற்சியை மே மாதம் முதல் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தொடக்கிவைப்பார் என்றும் மே மாதம் 31ம் திகதி இந்த பக்தி முயற்சியை அவர் நிறைவு செய்துவைப்பார் என்றும் புதியவழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட அவை அறிவித்துள்ளது.

ஒவ்வொரு நாளும் உரோம் நேரம் மாலை 6 மணிக்கு நடைபெறவிருக்கும் இந்த பக்தி முயற்சி திருப்பீடத்தின் அதிகாரபூர்வமான அலைவரிசைகளின் வழியே நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.

# காவலன் கலசம்



# இயேசுவின் இதயத்திற்கு ஏற்ற நல்ல மேய்ப்பர்களை உருவாக்குவோம்

## இறை அழைத்தல் ஆணைக்குழு இயக்குநரின் செய்தி

**"அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு"**

என்ற கிறிஸ்து இயேசுவின் அங்கலாய்ப்பு அன்று மட்டுமல்ல இன்றும் கூட ஒலித்த வண்ணமே உள்ளது. "மானிடராதல் அரிது" என்பதற்கிணங்க மானிடப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் படைத்த இறைவன் மீது அன்பும், பிரமாணிக்கமும், விசுவாசமும் உள்ளவர்களாக வாழ்வதிலே தான் அரிதாகப் பெற்ற மானிடப்பிறப்பின், மனித வாழ்வின் பூரணத்துவம் தங்கியுள்ளது.

இன்றைய உலகில் வாழும் மக்கள் அதுவும் குறிப்பாக நச்சு உயிரியின் தாக்கத்தால் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும், மனிதப் பேரவலத்தினுள் சிக்குண்டிருக்கும் மனித குலம் பிறரது அன்புப் பார்வைக்காக, அரவணைக்கும் கரத்திற்காக, அர்ப்பணிப்பு நிறைந்த சேவைக்காக ஏங்கித்தவித்த வண்ணம் துன்பம் - துயரம் என்ற அடர்காடுகளுக்கு இடையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. "கடல் நீர் நடுவே பயணம் போனால் குடி நீர் தருபவர் யாரோ?" என்ற வினாவுடன் மக்கள் வலம் வருகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் கிறிஸ்தவர்களாகிய எமது பொறுப்பு என்ன? எமது கடமை என்ன? "நான் என் சகோதரனுக்குக் காவலாளியோ?" எனக் கேட்கப் போகின்றோமா? அல்லது காயப்பட்டவனைக் கண்டும் காணாதது போல் சென்றவர்களில் ஒருவனாக வாழப் போகின்றோமா? நம்மை நாமே சீர்தூக்கிப் பார்த்து சிந்திக்க வேண்டும். சிந்தனையின் பிறப்பிடம் சிறப்பிடமாக அமைய வேண்டுமாயின் இறைவனின் குரலுக்கும், இறைவார்த்தைக்கும் நாம் செவிமடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இறைவனின் அழைப்பு என்பது பல வடிவங்களில் பல கோணங்களில் எம்மை நோக்கி வருகின்றது. கடலில் படகில் வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருந்தவர்களை இறைவன் அழைத்தார். தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை இறைவன் அழைத்தார். கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தச் சென்ற பவுலை அழைத்தார். ஆமணக்கம் செடியின் கீழ் இருந்த எலியாவை அழைத்தார், நினிவேக்குக் கப்பலேறிய யோனாவை அழைத்தார். இஸ்ராயேலரின் கூக்குரல் விண்வரை எட்டியபோது அதனை செவிமடுத்த கடவுளாகிய யாவே எரியும் முட்செடி நடுவே நின்று மோயீசனை அழைத்தார். இவ்வாறாக அழைப்பின் வடிவங்கள் மனிதனை நோக்கிப் பல நிலைகளில் வருகின்றன.

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் இறைவன் என்னையும் உங்களையும் அழைக்கின்றார். பணி வாழ்விற்கு அழைக்கின்றார்.

இன்று எம் மத்தியில் நீதியின் கதவுகள் அடைக்கப்பட்டுக் கிடக்கின்றன. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் விடிவு காணாமல் வீதிகளில் போராடுகின்றனர். தமிழ் அரசியல் கைதிகள் பன்னெடுங்காலம் நீதி பெறாமல் சிறைக்குள் சிறையாக முடங்கிக் கிடக்கின்றனர். உணவு ஒறுத்தல் போராட்டங்கள் தொடர்ச்சியாக சுழற்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எமது உறவுகளை நினைவு கூர முடியாதவாறு திரையிடப்பட்டிருக்கின்றோம். பல்வேறு வகையான சமூக சீரழிவுகளுக்குள் சிக்குண்டிருக்கின்றோம். இவற்றின் மத்தியில் இருந்து எவ்வாறு நாம் எம்மை விடுவித்துக்கொள்வது? எமக்கு வழி காட்டுவது யார்? வாழ வைப்பது யார்? தலைமைத்துவம் இருக்கின்றதா? வழிகாட்டிகள் இருக்கின்றனரா? சிந்திப்போம்.

அண்மையில் இருபெரும் ஆளுமைகளை நாம் இழந்து நிற்கின்றோம். மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் பேரருட்கலாநிதி இராயப்பு யோசப்பு ஆண்டகை நீதிக்காகவும், தமிழினத்தின் உரிமைக்காகவும் குரல்கொடுத்தார். நல்லதொரு நேரிய மேய்ப்பன். அந்த நல்ல மேய்ப்பனை, நின்றுயர் நாயகனை இழந்துவிட்டோம். திருமறைக் கலாமன்ற இயக்குனர் அருட்கலாநிதி மரியசேவியர் அடிகளார் தனது மறை பணி, கலைப் பணியின் ஊடாகத் தமிழர் தம் அவலங்களை வெளிக்கொணர்ந்து கலைத் தூதாக காலத்தில் பயணித்தார். இத்தகைய இருபெரும் தலைமைத்துவத் தூண்களை இழந்துவிட்டோம் என்று சொல்லிக்கொண்டிருப்பதில் எந்தவித பயனுமில்லை. அவர்களின் இடத்தை நிரப்ப நான் தயாரா? நீங்கள் தயாரா? இத்தகைய சரிவுகளை எல்லாம் நிமிர்த்துவதற்கு இன்று இறைவன் எம்மை அழைத்து நிற்கிறார்.

இதோ வாசற்படியில் நின்று கதவைத் தட்டுகின்றேன் எம் வீட்டுக் கதவு-களை அல்ல மனக் கதவுகளை இறைவன் தட்டுகின்றார். திருக்குடும்பங்களாக வாழும் பெற்றோர்களினதும், பிள்ளைகளினதும் மனங்களை இறைவன் தட்டிக்கொண்டே இருக்கின்றார். ஆனால் எம் மனங்கள் திறக்கப்படவில்லை. தட்டும் ஒலி கேட்கவில்லை. காரணம் என்ன தெரியுமா?

திருக்குடும்பங்களாகத் திகழ வேண்டிய குடும்பங்கள் தெருக்குடும்பங்களாக அலை மோதுகின்றன. இறைவன் தட்டும் ஒலிக்குப் பதிலாக தொலைக்காட்சி நாடக ஒலிகளே எம் செவிகளையும், மனங்களையும் நிரப்பிக் கொண்டிருக்கின்றன. முகப் புத்தகங்களில் முகம் புதைத்து, தொலைபேசிகளில் எம் சுயத்தைத் தொலைத்து, நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்களுக்குள் எம் ஆன்மீகத்தை நசுக்கி வேடிக்கை மனிதர்களாக நடைபோடும் எமக்கு அழைப்பின் குரல் அடங்கித்தான் கேட்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நிலையில் நாம் என்ன செய்யலாம்? இறைவனின் அழைப்பை ஏற்று இயேசுவின் பின்னே நாம் பயணிப்பதற்குத் தூய்மையான எண்ணமும், பிறரை நேசிக்கும் பண்பும், சுயநலமற்ற வாழ்வும் இருந்தால் போதும் நல்ல மேய்ப்பர்களாக நாம் உருவெடுக்கலாம். மனித வாழ்வில் எளிமையும், உண்மையும் இணைந்து செயற்பட்டால் இறைவ-னின் பணிவாழ்விற்கு, மக்களின் பணிக்கு எம்மை நாமே தயார்படுத்தி கோதுமை மணியாக நூறாகப் பலன் கொடுக்கலாம்.

**இறை அழைத்தல் ஞாயிறு சிறப்புக் கட்டுரை**

நல்ல மேய்ப்பர்களாகிட என்ற தொனிப்பொருளில் இம்முறை இறை அழைத்தல் ஊக்குவிக்கப்படுகின்றது. "நல்ல மேய்ப்பன் மந்தைகளுக்காகத் தன் உயிரையும் கொடுப்பான்" என்ற இயேசுவின் இதயத்தைப் பெற்றவர்களாக நல்ல மேய்ப்பர்கள் உருவாக பொது நிலையினரும், திருநிலையினரும் குடும்பங்களோடு இணைந்து உழைக்க வேண்டிய நல்லதொரு வாய்ப்பு நமக்கு இன்று தரப்பட்டுள்ளது.

இன்றைய நமது சமுதாயத்தில் மேய்ப்பர்கள் பலர் இருக்கின்றார்கள். நல்ல மேய்ப்பர் என்பதில் "நல்ல" என்ற அடைமொழிக்கு இலக்கணம் வகுத்து நல்ல மேய்ப்பர்களாக எம் இளம் சந்ததி பணிக்குருத்துவத்தில் காலடி பதிக்க உழைக்க வேண்டியது உயிருள்ள விசுவாசத்தின் அடையாளங்களுள் ஒன்றாகும். ஆட்டுத் தொழுவத்திற்கு வாசல் வழியாகப் பிரவேசியாமல் வேறு வழியாக பிரவேசிப்பவன் நல்ல மேய்ப்பனாக இருக்க மாட்டான் திருடனும் கொள்ளைக் காரனுமாக இருப்பான். தன் மந்தைகளின் குரலுக்கு செவிமடுக்க முடியாதவன் நல்ல மேய்ப்பனாக இருக்க மாட்டான். ஓநாய்கள் வரும்போது தன் மந்தைகளைக் கை விட்டு ஓடுபவன் நல்ல மேய்ப்பனாக இருக்க மாட்டான். எனவே தான் நல்ல மேய்ப்பர் என்பதற்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

நல்ல மேய்ப்பருக்கு இயேசுவின் இதயம் இருக்கும். இயேசுவின் இதயம் எப்படிப்பட்டது? நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காக உயிரையும் கொடுப்பான் என இயேசு கூறியதில் இயேசுவின் இதயத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். அவ்வாறு கூறியவர் அதனைச் செயலிலும் காட்டினார். இத்தகைய இதயம் படைத்த இறைவனுக்காகவும், இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்களுக்காகவும், படைப்புகளின் பரிசுத்தத்திற்காகவும் தம்மையே சுடரும் மெழுவர்த்தியாக ஏற்றக்கூடிய நல்ல மேய்ப்பர்களை நாம் உருவாக்க வேண்டும். நல்ல மேய்ப்பர்கள் இந்த மண்ணில் உருவாக வேண்டும்.

எமது குடும்பங்களை உலகியல் காட்சிப் பொருட்களாக மாற்றாமல் இறையியல் கருத்துப் பொருட்களாக மாற்றுவோம். எமது குடும்பங்களில் இருந்து மக்கள் பணியாகிய இறை பணிக்கு எம் பிள்ளைகளைக் கையளிப்போம் பெற்றோர்கள் தாம் பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் இயந்திரங்கள் என்று தம்மைக் கருதி வாழாமல் பிள்ளைகளின் நலன்களில் அக்கறை கொள்ளும் பெற்றோர்களாகப் பிள்ளைகள் ஆன்மீகத்தில் வளர, வாழ வழிகாட்டுபவர்களாகத் தம்மை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

அன்னை திரேசாவின் பணியை வியந்து கூறப்பட்ட கூற்றுக்களில் ஒன்று. "தாயே நீ கருவுற்றிருந்தால் தனி ஒருவனுக்குத் தாயாகி இருப்பாய் ஆனால் நீ கருணையுற்றதால் முழு உலகுக்கும் தாயானாய்". அன்னை திரேசாவின் இந்தக் கருணை தான் இயேசுவின் இதயம். இத்தகைய இதயம் கொண்ட நல்ல மேய்ப்பர்கள் நலமே உருவாக செபத்தோடு மட்டும் எல்லையிட்டு நிற்காமல் செயலிலும் இறங்கி செயற் படுவோம். பிரார்த்தனை செய்யும் உதடுகளை விடசேவை செய்யும் கரங்கள் புனிதமானவை என்பதை நினைவில் நிறுத்தி, பணி வாழ்விற்கு எம்மைத் தயார்படுத்தி, "என்னை பின் செல்" என்ற இறைவனின் அழைப்பின் குரலுக்கு "இதோ வருகின்றேன்" என உறுதியின் உறைவிடங்களாய் உருவெடுப்போம்.. சக்கேயுவே இறங்கி வா ஆண்டவர் அழைக்கின்றார் என்னையும் உங்களையும்... இறங்குவோம் நல்ல மேய்ப்பர்களாக.. இயேசுவின் இதயத்தோடு...

**அருட்பணி அ.ஜெ.அன்ரனி ஜெயரஞ்சன்**

---

## அழைத்தல் சுவடுகளின் பயணம்

கால வேந்தன் வரைந்த
காலத்தின் தேவையில்
அக் கால வேந்தனே வாழ்ந்த
வாழ்வின் அடிச்சுவடுகளில் - ஒரு
பயணம்

வாழ்வின் விரக்தி என்னும்
அலையில்
அலைந்து திரிந்து சிதறி
சின்னாபின்னமாக
வாழும் மாந்தர்களைத் தேடும்
ஒரு விடியலை நோக்கிய பயணம்

நல்ல ஆயன் கிறிஸ்துவின் வழியில்
மந்தைகளை அரவணைக்கும்
அன்பனாகவும்
ஆபத்து வேளைகளில் மந்தைகளின்
காவலனாகவும்
வாழ அழைக்கும் ஒரு ஆயனின்
பயணம்

வாழ்க்கையின் தனிமைக்குள்
இழப்புகளின் வலிகளுக்குள்
இயலாமையின் தவிப்புக்குள்
வீறுநடை போடவைக்கும் பயணம்

கற்களும் முட்களும் தடைகளும்
என் பயணத்தில் அங்கும்
இங்கும் கிடக்கின்றன
அத்தனையும் தாண்டி
சரித்திரம் படைத்து
சிகரம் நோக்கிப் பறக்க
வைக்கும் என் பயணம்

குருப்பட்ட தினத்தில் மாலை
தாங்கிய குருவும்
பலியிடக்கொண்டு செல்ல மாலை
தாங்கிய பலியாடும் - ஒன்றே
அதுதான் தன்னையே
முழுமையாக உடைக்கும்
இயேசுவின் உன்னத அழைப்பு.

கல்வாரியில் கதாநாயகனும்
என்னை அழைத்த நாயகனது
நம்பிக்கையிலும், கல்வாரி
நாயகனது பயணத்தில் கூடவே
நடந்த தாய் மரியின் அன்பிலும்
தொடர்ந்து
பயணிக்கின்றேன் என்னையே
உடைத்திட.....

**அ.அமின்றோ**
**க.பொ.த உயர்தரம்**
**புனித மருத்தினார் குருமடம்**

---

## நான் உம் அன்பிற்கு சான்றாவேன்


சின்னவயதில் நான் கண்ட
சின்னச் சின்னக் கனவுகள்
சிலுவை மர இலட்சிய வீரன் இயேசுவின்
சிகரம் தொட்ட கனவுகளை
சிரம் தாழ்த்தித் தொடர்ந்திட
வாழும் காலம் எல்லாம் அவரோடு பணி செய்வதே

பக்குவப்பட்ட வயதில் மீண்டும் ஒரு முறை
குருமடத் தாயின் கருவறையில்
பாலக உருவெடுத்துப் பிரசவித்தேன்
பிறந்தேன் வெகுளியாக
வளரும்போது பாதைகள் பல கடந்தேன்
அதில் சில பாலைவனமும் கடந்தேன்
எத்தனை முட்கள் எத்தனை மலர்கள்
எத்தனை திருப்பங்கள் நம்பிக்கைத் துரோகங்கள்
ஆசைகள், நிராசைகள்
நீயா நானா என்ற வைராக்கியங்கள்
மாசற்ற நட்பு வட்டாரங்கள்
புரியாத சில பச்சோந்திகள்
எத்தனை பொய் வேசங்களைக் கண்டேன்
அத்தனையும் கடந்தேன்

மீண்டும் மீண்டும் என்னை வலுப்படுத்திய
அவ்வலிகள்
இன்னும் இன்னும் இயேசுவை
அன்பு செய்ய வைத்தன
தன் பதம் அழைத்து உருத்தரும் ஆண்டவருக்கு
சான்றாக வாழ்ந்திடுவேன்...

[illegible]

# புன்னகையின் மருத்துவம்



அருட்பணி வின்சன் பற்றிக் (அமதி)

பழைய உறவுகளைப் புதுப்பிக்கவும் புதிய உறவுகளைப் பிறப்பிக்கவும் புன்னகை உதவி புரிகின்றது. சின்னஞ் சிறிசுகளின் கள்ளம், கபடற்ற புன்னகை நல்ல மனிதர்களின் புன்னகை புனிதமான உறவுப் பாலத்தை உருவாக்குகின்றது.

எளியோரைத் தாழ்த்தி வலியோரை வாழ்த்தும் வேடங்களும் உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் முரண்பாட்டுத் கோலங்களும் 'சிரிப்பது போலே முகம் இருக்கும், சிரிப்பிற்குள் நாகம் ஒழிந்திருக்கும்' போலி ஜாலங்களும் களங்கமற்ற புன்னகையில் காணப்படாது.

கொழும்பு நகரில் பிரசித்திபெற்ற கம்பனியில் நடைபெற்ற சம்பவம் இது. கம்பனியின் திடீர் வருமான வீழ்ச்சி முகாமையாளரைத் திணற வைத்தது. அவர் கணக்காளரை அழைத்து வருமான வீழ்ச்சிக்கான காரணத்தைக் கண்டுபிடிக்குமாறு பணித்தார். வாடிக்கையாளரின் வீழ்ச்சியே வருமான வீழ்ச்சிக்குக் காரணம் எனக் கணக்காளர் முடிவுக்கு வந்தார்.

முகாமையாளர் வணிக உளவியலாளரை வரவழைத்து ஆய்வினைத் தொடர்ந்தார். வணிக உளவியலாளர் வாடிக்கையாளரை வரவேற்கும் புன்னகை பூத்த முகம் இல்லாமையே காரணமாகும் என்ற முடிவை முன்வைத்து மாற்றுத் திட்டத்திற்கு வழி வகுத்தார்.

புன்னகை பூக்கத் தெரியாதோர் வியாபாரத்தில் மட்டுமல்ல மனித வாழ்க்கையிலும் வெற்றி பெறமாட்டார்கள். உறவுகளில் உச்சப்பயன் பெற புன்னகை பூத்த முகத்தை மலரவிடுவது அவசியமாகும். பிறரோடு சேர்ந்து சிரித்து மகிழ்வதும் பிறரது சிரிப்புப் பொருளாக மாறாதிருப்பதும் மகிழ்ச்சியான வாழ்வுக்கு இன்றியமையாதவையாகும். சிரித்து வாழவேண்டும் எனின் பல்லிழித்து வாழுதல் என்பதல்ல.

அகந்தைச் சிரிப்பு, ஆணவச் சிரிப்பு, ஏளனச் சிரிப்பு, போலிச்சிரிப்பு போன்றவை ஆரோக்கியமான சிரிப்பிற்கு முரணானவை. நல்ல உள்ளத்திலிருந்து உருவாகுவதும் தூய உறவின்பொழுது உதயமாவதுமான நேர்மையான சிரிப்பே உளச் சமநிலையைத் தோற்றுவிக்கின்றது.

**சிரிப்பின் சிறப்பு**

சிரிப்பு உளவியலில் ஆய்வினை டாக்டர் சிங் மேற்கொண்டார். அவரது ஆய்வின் கண்டுபிடிப்புக்களைக் கவனிப்போம். ஒன்றாகச் சிரிக்கும் மக்கள் அதிக ஆற்றல் சக்தி படைத்தவர்கள் என்பதை அவதானித்தார். ஏறக்குறைய 14 மாணவர்கள் இருந்த வகுப்பறையில் இஸ்ராயேலரின் நகைச்சுவைப் படம் திரையிடப்பட்டது. வகுப்பிற்கு வெளியேயிருந்தோரும் சிரித்ததால் சிரித்தவர்களின் எண்ணிக்கை 35 ஆகியது. அப்படிச் சிரித்த மாணவர்கள் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றனர். அவரது ஆய்வின்படி, சிரிப்பு மனிதரை இயக்கும் ஒருவகை இயந்திரமாகும்.

**சிரித்துச் சிரித்து, புன்னகை பூத்த முகத்துடன் மகிழ்வுற்று மலர்ந்திட,**

- சிறந்தவற்றைச் சிந்திப்போம்
- மறந்தவற்றை நினைத்திடுவோம்
- தரமானவற்றைச் சுவைத்திடுவோம்
- துயரமானவற்றைக்களைந்திடுவோம்
- எளிமையாக வாழ்ந்திடுவோம்
- ஏமாறாமல் ஏற்றம் பெறுவோம்
- அன்பினைப் பருகிடுவோம்
- ஆனந்தத்தில் மிதந்திடுவோம்.

மகிழ்ச்சிகரமான வாழ்வினைத் துணிச்சலான, தூய சிந்தனையின் உதவியுடன் அமைத்துக் கொள்ளலாம். எமது மனங்களில் துயரமான சிந்தனைகள் எழும்பொழுது, உடனடியாக மகிழ்வான சிந்தனைகளால் நிரப்பவேண்டும். காலையில் எழுந்ததும் மகிழ்ச்சிகரமான நிகழ்வினை மனதில் பதியவைத்துப் பரவசமடைவோம்.

"இன்று நிகழவேண்டும் என நாம் விரும்புகின்ற மகிழ்ச்சிகரமான நிகழ்வுகளை ஒருங்கிணைத்து மனக்கண் முன் வைப்போம். இன்றைய நாள் மகிழ்ச்சிகரமான நாளாக அமையவேண்டும் என ஆசிப்போம். இன்று என் வாழ்க்கையில் எழும் பிரச்சினைகள் அத்தனையையும் இலகுவாகத் தீர்க்க முயற்சிப்பேன்" எனப் பதிவு செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றார் சிந்தனையாளர் வின்சன் பீல்.

இவ்வாறு எம்மையே நாம் பயிற்றுவித்துக் கொண்டால் எம்மை வீணே வாட்டும் கவலைகளில் இருந்து விடுவித்து, நிறைமகிழ்வோடு வாழும் வாய்ப்பினைப் பெறுவோம்.

மனதிற்கு மகிழ்ச்சி ஊட்டும் ஆரோக்கியமான சிந்தனைகளை வளர்ப்பதன் மூலமாவும் மனிதனை மதிக்கும் ஆரோக்கியமான சூழலில் வளர்வதன் மூலமாகவும் சிந்தித்து, சிரித்து வாழும் சுகமான சமுதாயத்தை உருவாக்குவது சாத்தியமாகும்.

இதய பூர்வமான தொடர்பாடலை முன்னெடுத்து, பரிவு, நேயம், தியாகம், விட்டுக் கொடுத்தல், விளங்கிக் கொள்ளல் போன்ற பண்புகளால் எமது மனங்களை வலுவூட்டுவோம். பயம், பதட்டம், கோபம், சோகம், பொறாமை, பேராசை போன்ற எதிர்மறை உணர்வுகளைப் புறநீங்கல் செய்வோம்.

இரக்கம், விருந்தோம்பல், மகிழ்ச்சி, நன்னயம், நாணயம் போன்ற வன்முறையற்ற உணர்வுகளை வெளிக்காட்டி இன்புறுவோம். சுவையான உணர்வை இதமான, இனிதான பேச்சுத் தரட்டும். நாங்கள் காண்பது, கேட்பது, பேசுவது, சிந்திப்பது எல்லாம் எமது நல்எண்ண வெளிப்பாடாக அமைவதை அனுபவித்து அறிந்துகொள்வோம்.

***சுகமான வாழ்வு***
***இதமாக மலர,***
***அகம்தனை அலங்கரித்து,***
***அமைதியாக***
***மகிழ்வுறுவோம்.***

---

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

**ஈழத்தில் சங்கமித்த ஐரோப்பிய முத்துக்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**சிஸ். திரேசா மோர்கன் - Theresa Morgan (Elizabeth)**

மாணவிகளின் பெற்றோருடனும், அன்பு கொண்டு வந்தார். பெற்றோரின் பொறுப்புக்கள், பராமரிப்பையும் எடுத்துக் காட்டி பிள்ளைகளின் நிறைவான வாழ்விற்கு. அவர்களின் பங்களிப்பு எவ்வளவு முக்கியம் என்று, சிறந்ததோர் வழிகாட்டியாக விளங்கினார்.

சிஸ். தெரேசாவினால்பராமரிக்கப்பட்ட எத்தனையோ மாணவிகள் சிறந்த, கத்தோலிக்க, இந்துமத குடும்பப்பெண்களாகவும் நன்மை செய்யும் சமூகப் பெண்களாவும், அவர்களின் வாரிசுகளான பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சிறந்த சமுதாயத்தில் ஒளிவிளக்குகளாகவும் துலங்குகின்றனர். பலர் துறவற அழைப்பினால் ஈர்க்கப்பட்டு, இறைவனுக்குத் தங்களை அர்ப்பணித்து, மக்களுக்குப்பலவிதபணிகளைச் செய்கிறார்கள். 20வருடாங்களுக்குமேலாக இவரின் அயராத பணி யாழ் மடத்து விடுதியில் வாழ்ந்த அநேக மாணவிகளுக்கு வாழ்வளித்தது. விடுதிக்கழகத்தின் "ஆணிவேராக" மூலைக் கல்லாக விடுதிச்சாலையின் ஸ்தாபகியாக இருந்தார். என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

1954ம் ஆண்டு பங்குனியில் ஐரோப்பாவுக்குச் சென்று தன் குடும்ப உறவினரைச் சந்தித்து புரட்டாதி மாதம் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் வந்து சேர்ந்தார். தனது பழைய மாணவச் செல்வங்களை மீண்டும் சந்தித்து மகிழ்வைப் புதுப்பித்து 1955ம் ஆண்டு தை மாதம் 11ம் திகதி பம்பலப்பிட்டிக்குச் சென்றார். 1961ம் ஆண்டு சிஸ். தெரேசாவின் அன்புத் தாயார் இறந்து விட்டார். இச்செய்தி கிடைத்தபோது, சிஸ். தெரேசா நுவரெலியாவில் இருந்தார். வேதனை அவரை வாட்டியது. 1964ம் ஆண்டு தனது குடும்ப உறவுகளைச் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

அவ்வேளை இங்கிலாந்து மாகாணத்தில் தனது பணியைப் பெற்றுக்கொண்டார். 1996ம் ஆண்டு தனது பணியின் பரிசைப் பெற்றுக்கொள்ள அழைத்த இறைவன் ஆடி மாதம் 1ம் திகதி தம்மிடம் அழைத்துக் கொண்டார்.

சிஸ். தெரேசா விட்டுச்சென்ற விடுதிச்சாலைப் பணி தொடரப்பட்டது. 1954-1978 வரை சிஸ் பிறிச்சிற் கபிரியேல்பிள்ளை பொறுப்பேற்றுநடத்தினார். தனதுமுதல் அர்ப்பணம் செய்தபின் சுதேச சகோதரியாக பல கஸ்ரங்கள் மத்தியில் இப்பணியை ஏற்றுக்கொண்டார். ஐரோப்பிய சகோதரிகளினால் உருவாக்கப்பட்ட மாணவர்களுக்கு சுதேச சகோதரிகள் பொறுப்பெடுப்பது, ஆரம்பத்தில் கஸ்ரமாக இருந்தாலும், சிஸ் பிறிஜிற் கையாண்ட வழிமுறைகள், ஒழுங்குகள், உறவுமுறைகள், உபசரணைப்பாடங்கள் யாவும், சுற்றுச் சூழல் புனிதமாக வைத்திருத்தல் போன்ற காரியங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. பெற்றோரும் சுதேச சகோதரியின் வழிகாட்டலை ஏற்றுக்கொண்டார்கள். தங்கள் பிள்ளைகள் விடுதிச்சாலையின் கட்டுக்கோப்புக்குள் வளர்ந்து படித்து வளர்ச்சி பெறுவதை அறிந்து சந்தோசப்பட்டார்கள். கத்தோலிக்க நிறுவனம் என்பதால், சகோதரி பிறிஜிற் காலையில் குறித்த நேரத்திற்கு துயிலெழல் அந்நேரமே "இறைவனுக்கு மகிமை" பதில் "இறைவனுக்கே நன்றி" வாழ்த்தொலியுடன் குரல் கொடுத்தல், திருப்பலி, காலை உணவு, பாடசாலைக்குச் செல்லுதல் யாவற்றிலும் மாணவர்கள் மகிழ்வாகவும், ஒற்றுமையாகவும் பங்கெடுக்க உரிய வழிகளைக் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருந்தார்.

பாடசாலைக்குக் குறித்த நேரத்திற்குச் செல்லுதல், ஒழுங்காக வருதல், பாட ஆயத்த நேரங்களில் எப்பொழுதும் ஆங்கிலம் பேசு

**அருட்சகோதரி அம்புரோஸின் மார்க்**

தல் மூலம் மாணவர் படிப்பில் ஊக்கம் பெற வாய்ப்பு உண்டு. இவ்விதமாக விடுதிச்சாலை நாளுக்கு நாள் வளர்ச்சி அடைய சிஸ் பிறிஜிற் வழிசமைத்தார். பாடசாலையிலும், படிப்பு விளையாட்டு என்று மாணவர்கள் பலவித போட்டிகளிலும் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்றுள்ளாார்கள்.

அருட்சகோதரி அவர்கள் ஆரம்பித்த விடுதிச்சாலை இன்றும் துரித வளர்ச்சியடைந்து பல ஆசான்களை உருவாக்கிக் கொண்டு இருக்கிறது. 1979 - 1981 அருட்சகோதரி மரிஸ்ரெலா ஆரோக்கியமும் 1982 - 1987 சிஸ் ஸ்ரெலா துரைசாமியும் 1988 - 1998 சிஸ்ரர் றோஸ்மலர் மனுவல்பிள்ளையும் சிஸ் யூடி இம்மானுவேலும், பின்னர் சிஸ் யசிந்தாமாறியும் மாணவருக்குப் பொறுப்பெடுத்தனர். 1999 - 2002 யசிந்தா மாறி சங்கீதத்தில் ஆர்வமுள்ளதால் மாணவர்களுக்கு இயற்கையுடன் இணைந்த நிலையில் பாட்டுக்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் பழக்கி, எல்லோராலும் பாராட்டுக்கள் பெற்றார்.

இவர்களைத் தொடர்ந்து சிஸ் ஜெசிக்கா, இசபெல்லா, தனுஜா, நிவேதா, அஞ்சலீன், அமலி 2006 - 2014 வரையான காலப்பகுதியில் விடுதிச்சாலையில் பணிபுரிந்தனர். இதன் பின்னர் சிஸ் மரிஸ்ரெலா சூசைப்பிள்ளை மாணவர்களின் நலன்கருதி சில கட்டிடங்கள் புதுப்பித்து ரியூசன் அறை கட்டி அருட்சகோதரி தெரேசா இறந்தாலும் மறவாது நினைவு கூர்ந்து வரப்படுகிறார். 2018ம் ஆண்டு பியன்வெனு குழு அங்கத்தவர்களின் முயற்சியினாலும், மாகாணக் குழுவின் உதவியினாலும் தெரேசா கொஸ்ரல் திருத்த வேலைகள் செய்யப்பட்டன. "திரேஸ் இல்லம்" என்ற நாமமும் சூட்டப்பட்டது. இதற்கான செலவும் பியன்வெனு குழுவினாலேயே ஒதுக்கப்பட்டது. உண்மையில் சிஸ் தெரேசா இறைவனால் எமக்குக் கொடுக்கப்பட்ட பெரிய கொடை, பட்டம் பதவிகள் பெறாவிட்டாலும், சமுதாயத்தின் ஒளிவிளக்குகளாக, கிறிஸ்தவ விழுமியங்கள், ஒழுக்கசீலங்கள் கடைப்பிடித்து வாழும் நல்ல தலைவிகளாக எம் யாழ் திருச்சபையின் கல்விச்சாலையின் நல்ல மாணவச் செல்வங்களாக, திருக்குடும்பத் துறவிகளாக உருவாக்கிய பெருமை பெற்றுள்ளார்.

(தொடரும்..)




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(மதன், மன்னார்)*
**கேள்வி: ஆயர் இராயப்பு யோசேப்பின் இறப்புச் செய்தி உலகம் பூராகவும் பெரும் சோகத்தினை ஏற்படுத்தியிருந்தது. அதற்கான காரணம் என்ன?**
ப: மதன், காரணங்கள் பல. அவற்றில் ஒன்று, ஆயர் இராயப்பு யோசேப்பு, மன்னார் மறைமாவட்டத்தின் (கத்தோலிக்க மக்களின்) ஆயராகப் பணியாற்றி இருப்பினும் அவர் சமயம் என்ற எல்லையைக் கடந்து எல்லா மக்களையும் கடவுளின் பிள்ளைகளாகக் கருதி அவர்கள் எல்லோரையும் தன் சகோதர சகோதரிகளாக அன்புசெய்து பணியாற்றியதுதான் அனைத்து மக்களும் அவரை அன்புசெய்யக் காரணமாக இருந்தது. அத்துடன், ஏழைகள் மட்டிலும் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களின் நலன்கள் மட்டிலும் மிகவும் துணிவோடு ஆயர்செய்த நீண்டகாலப் பணிகளாலும் மக்களின் மனங்களை வென்ற ஆன்மீகத் தலைவராக அனைவராலும் போற்றப்பட்டார். இப்படிப்பட்ட மக்களின் ஆயனை இழந்ததால் மக்கள் மத்தியில் பெரும் சோகம் ஏற்படக் காரணமாய் அமைந்தது.

*(மல்லிகா, முல்லைத்தீவு)*
**கே: மறைந்த மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை பல்வேறுபட்ட பணிகளை ஆற்றுவதற்குக் காரணமாய் இருந்தவை எவை?**
ப: ஆயர் கொண்டிருந்த இறை நம்பிக்கையும் ஆன்மீகப் பலமும் மன உறுதியும் இடைவிடா இயக்கமும் தொடர் செயற்பாடும் காரணமாய் இருந்தன என நினைக்கின்றேன்.

*(செல்வி, யாழ்ப்பாணம்)*
**கே: மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பின் இழப்பும் திருமறைக்கலாமன்ற இயக்குநர் அருட்திரு மரியசேவியர் அடிகளாரின் இழப்பும் கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கு பெரும் இழப்பாகும். இவர்களின் பங்களிப்பை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**
ப: செல்வி, இராயப்பு யோசேப்பு ஆண்டகை தமிழ் மக்களின் உரிமைக் குரலாக ஒலித்தார். குறிப்பாக, அவர் நீதிக்காக, மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார். எங்கெல்லாம் அநீதி இழைக்கப்பட்டதோ எங்கெல்லாம் மக்கள் துன்புறுத்தப்பட்டார்களோ அங்கு அவர் இறைவாக்கினராக, துன்புறும் மக்களின் குரலாக செயற்பட்டார். மேலும், தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை ஆதரித்ததோடு அவற்றுக்கான காரணங்களையும் முன்வைத்ததோடு அவற்றைச் சர்வதேசத்திற்கு எடுத்துக்கூறி வந்தார். அருள்தந்தை நீ. மரியசேவியர் அடிகளாரைப் பொறுத்தவரையில் அவர் இன, மத, மொழி வரையறைகளைக் கடந்து கலைகளின் வழியாக சமூகங்களை ஒன்றிணைத்தார்.

மேலும், கலைகளின் ஊடாக ஆன்மீகத்தை வளர்த்தார். கலைகளின் மூலம் இறை - மனித உறவையும் மனிதர்களுக்கிடையிலான உறவையும் அவர் வளர்க்க உழைத்தார். அதில் பெரும் வெற்றியும் கண்டார்.

*(அமலன், யாழ்ப்பாணம்)*
**கே: அருட்பணி நீக்கிலாப்பிள்ளை மரிய சேவியர் அடிகளாரின் இழப்பு தமிழ் உலகிற்குப் பேரிழப்பு. இவரின் இடம் எப்படி ஈடுசெய்யப்படும்?**
ப: அமலன், ஒருவரின் இடத்தினை இன்னொருவர் ஈடுசெய்ய முடியாது! இருப்பவர்கள் அவர் விட்டுச்சென்ற பணிகளைத் தொடரவேண்டும் தொடர்வார்கள்..நிற்க,
மரியசேவியர் அடிகளார் தனக்குப் பின் இப்பணிகளைத் தொடர ஒரு தலைமுறையை உருவாக்கிச் சென்றிருக்கின்றார். அவர்கள் நிலத்திலும் புலத்திலும் தங்கள் பணிகளை ஆற்றுவதன் வழியாக அவர்தம் பணிகளைத் தொடர்வார்கள்.

*(ஞானம், யாழ்ப்பாணம்)*
**கே: மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பும் திருமறைக்கலாமன்ற நிறுவுநர் மரிய சேவியர் அடிகளாரும் எங்கள் மத்தியில் தனிப் பெரும் ஆளுமைகளாகத் திகழ்ந்தவர்கள். இவர்களின் தனித்துவமான பணிகளை எவ்வாறு நோக்கலாம்?**
ப: ஞானம், தனிநாயகம் அடிகள் தமிழ்த் தூது! மரிய சேவியர் அடிகள் கலைத்தூது!! இராயப்பு யோசேப்பு ஆண்டகை உரிமைத் தூது!!!

*(நவம், முல்லைத்தீவு)*
**கே: ஒரு கல்வி நிறுவனமோ அல்லது ஏதாவது ஒரு ஸ்தாபனமோ திறப்பு விழாவினைச் செய்தால் அதனை ஒரு தடவைதான் செய்யும்! ஆனால், ஒரே நிறுவனம் ஏன் திறப்பு விழாவினை அடுத்தடுத்துச் செய்கின்றது?**
ப: நவம், என்ன செய்கின்றார்கள் என்பதை அந்நிறுவனமே மறந்துவிட்டது போல! அதனால்தான், திறப்பு விழாவினைச் செய்து தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்கின்றார்கள் போல!

*(அமலன், யாழ்ப்பாணம்)*
**கே: அதிகாரத்தில் இருக்கும்போது கீழ்ப்படிவு, பொறுப்பு, கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்றெல்லாம் நன்றாகப் பேசுகின்றார்கள். ஆனால், தங்கள் காலம் முடிந்து அப்பொறுப்புக்களில் இருந்து விலகியதும் மேற்சொன்ன விடயங்கள் எதனையும் அவர்கள் கடைப்பிடிப்பதாய் தெரியவில்லையே! ஏன்?**
ப: அமலன், ஊருக்கு மட்டும் உபதேசம் உரைக்கத் தெரிந்தவர்கள் இவர்கள்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*
**கே: கொரோனாவின் தாண்டவம் இனித்தான் கொடிகட்டிப் பறக்கும் போல் தெரிகின்றது! நான் நினைப்பது சரியா?**
ப: ஆனந்தன், கவனமாக இருந்து மக்கள் தம்மைக் காக்கவில்லை என்றால் கொரோனா கொடிகட்டியும் பறக்கும், கொடி கட்டாமலும் பறக்கும்!

*(கவி, வவுனியா)*
**கே: மன இறுக்கம் கூடிச் செல்கின்றது! வாய்விட்டுச் சிரிக்க ஒரு பகிடி சொல்லுங்களேன்!**
ப: காரைக்கவி கந்தையா பத்மானந்தன் கூறிய ஒரு பகிடியை ருசியுங்கள் கவி!
மன்னன்: அமைச்சரே அண்டை நாட்டு மன்னன் போரைப்பற்றி என்னவோ சொன்னான் என்றீரே!
அமைச்சர்: மன்னா கொரோனாப் பிரச்சினையால சமூக இடைவெளி பேணிச் சண்டை பிடிக்கிறது கஷ்ரமாம். அதனால்..
மன்னன்: அதனால்.. என்ன இழுக்கிறீர்...
அமைச்சர்: அதனால், சூமில சண்டை பிடிக்கலாமா என்று கேட்கிறார் மன்னா!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

# இளையோர் காவியம்

நீ கொடுப்பதில்லை
உன் வளியாகக் கொடுக்கப்படுகிறது
இது புகழ்பூத்த பெரும் கவிஞன்
கவிக்கோ அப்துல் ரகுமானின் வரிகள்

இருண்டு கிடக்கிற வாழ்க்கைக்கு
விடியப்போகிறது பொழுது
நீ உன் விலாவில் இருந்து
வழிகிற வியர்வை
கடவுளின் சக்தி கலந்த கலவை

நீ சமூகங்களின்
அதியுயர் பாதுகாப்பு வலயம்

ஒரு சமூகம் சேதாரம் இல்லாமல்
வளர்ச்சி உன்னுடைய விழிப்பு

உன் எழுகை என்பது
அநீதிகளின் இறப்புச் சான்றிதழ்

நீ காப்பாற்ற வேண்டிய மனிதம்
அழுதபடி நிற்கிறது
மனிதர் வீசிய வார்த்தைகளின்
கல் வீச்சில்
மரணத்தின் விழிம்பில் கூட
சுயநலம்
தூண்டில் போட்டு
தூக்கி விடுகிறது மனிதத்தை

உன் பொதுநலம் அன்பு
ஏணியை இறங்கித்
தூக்கி விடுகிறது
மனிதத்தை

நீ தேடு
தேடுவதால்
தேடப்படுகிறாய்
நீயும்.. (தொடரும்...)

- உயிரோவியன்

# வைகாசிப் புஸ்பங்கள்

மலர்களே! வில்லி மலர்களே!
வைகாசி வருவதை உங்களுக்கு
சொல்லித் தருவது யார்?
என்னமாய்ப் பூக்கிறீர்கள்!
பூமிக்குள்ளிருந்து பூவாகவே
வெளியே வருகிறீர்களே
வைகாசி வந்தவுடன்
சாதாரணமானவர்களா நீங்கள்?
ஆண்டவனே வியந்த மலர்களல்லவா
பூக்களே நீங்கள் இராஜாங்கம் நடத்த
வைகாசியைத் தேர்ந்து கொண்டது
அது மாதாவின் மாதம் என்பதாலா?
இந்த வணக்க மாதத்துக்கு
வாழ்த்துச் சொல்லவா?
எங்கள் மண்
மறக்க முடியாத மாதமும் வைகாசி
மலர்ந்திடுங்கள்
இதயங்களை இயக்கிடுங்கள்
காயங்களை ஆற்றுப்படுத்துங்கள்...

ஜெயபாலாஜி
முருங்கன்



# உழைப்பு



"விழிகளின் வேர்வைதான் கண்ணீர்" என்பார் அப்துல் ரகுமான். இன்று உழைப்பாளர்களின் கண்கள் மட்டுமே வியர்வையைச் சொரிகின்றன.

உழைப்புக்கு வரையறையாய் திகழ்ந்த உழவர்கள் இன்று உதா சீனப்படுத்தப்படுகிறார்கள். பொருளாதார உலகமயமாக்கல் அவர்களைக் கலங்கடித்து விட்டது. 'உழவுக்கு வந்தனை செய்வோம்' என்ற வாக்கு, இன்று 'கார்பரேட் கம்பெனிக்குக் கம்பளம் விரிப்போம்' என்று மாறி விட்டது. கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் கடன்படுவதும், கஞ்சி ஊற்றிய காணி நிலத்தையும் விற்று காசாக்குவதும், உடமையாளனாய் இருந்தவர்கள் எதிர்காலப் பயத்தைக் கண்களில் தேக்கி, கூலி வேலைக்காய் குடியிருப்புகளை விட்டு வெளியேறுவதும் நம்மைக் கலங்க வைக்கிறது. உழைப்பு உன்னதம், அது உரிமை. உழைக்காதவன் உண்ணலாகாது என்பதல்ல, உண்ணத்தெரிந்தவன் எல்லாம் உழைக்கவேண்டும் என்பதே இந்த நாளின் சவால். பணத்திற்கு விலை போகாமல், வியர்வைக்குத் தடைபோடாமல் உழைப்புக்கு வலுச்சேர்ப்போம்.

# காவலன் கலசம்

அருட்பணி ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் எழுத்தாளராக ஊடகவியலாள ராக, ஊடகவியல்துறையின் விரிவுரையாளராகப் பல்வேறு தளங்களில் பணியாற்றி வருபவர், ஊடகவியல் சார்ந்த பல்வேறு நூல்களையும் வெளியிட்டவர். 'பிசப் சவுந்தரம் மீடியா' என்ற ஊடகவியல் களத்தினை உருவாக்கி நடத்தி வருபவர், எல்லாவற்றும் மேலாக பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகப் பத்து ஆண்டுகளாகப் பணியாற்றி அதன் வளரச்சிக்கும் மாற்றத்திற்கும் உதவியவர். பாதுகாவலன் பற்றிய அவரது அனுபவங்களை இந்த நேர்காணல் மூலமாக இன்றைய கலைக்காவலன் இணைத்துக்கொள்ளுகின்றது.

# "பாதுகாவலன் பத்திரிகை ஓவ் செற் அச்சுப் பதிவு முறையில் யாழ்ப்பாணத்தில் வெளிவரத் தொடங்கிய முதல் பத்திரிகை"



**பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றி அதேவேளை அப்பத்திரிகைகையில் பல ஆக்கங்களையும் எழுதிய எழுத்தாளராகவும் உள்ளீர்கள். அப்பத்திரிகைக்கும் உங்களுக்குமான உறவு எவ்வாறு ஏற்பட்டது?**

யாழ் மறைமாவட்டத்தின் அதிகாரபூர்வ ஏடான பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகப் 10 ஆண்டுகள் (1997 - 2007) பணியாற்றியுள்ளேன். நான் இந்தியா சென்னை பூந்தமல்லி திரு இருதயக் கல்லூரியில் மெய்யியல் கல்வியைக் கற்றுக் கொண்டிருந்த போது 'மௌன ஊர்வலம்' என்ற ஒரு சிறுகதை எழுதி அப்போது பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியராக இருந்த அன்ரன் மத்தாயஸ் அடிகளாருக்கு அனுப்பி வைத்தேன். அது 23 நவம்பர் 1979ஆம் ஆண்டு பிரசுரமானது. இதுவே பாதுகாவலன் உடனான முதல் தொடர்பு. 1989ஆம் ஆண்டு பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியராக இருந்த அமரர் ஈ.ஜே. அருமைநாயகம் அடிகளார் வெளிநாடு சென்ற போது தற்காலிக ஆசிரியராகப் பணியாற்றினேன். (24 நவம்பர் 1989 இதழ் 37 - 42) அதன் பின்னர் ஈ.ஜே. அருமைநாயகம் அடிகளார் நீர் கட்டாயம் பாதுகாவலன் ஆசிரியப் பணியை ஏற்கும் காலம் வரும் என்றார். நான் அதை பெரிதாக எடுக்கவும் இல்லை. அப்பணியை எதிர்பார்க்கவும் இல்லை. ஒரு இடர்மிகுந்த காலப்பகுதியில்தான் அப்பணி என்னிடம் தரப்பட்டது.

**இடப்பெயர்வுக்குப் பின்னரான இடர்மிகுந்த காலத்தில் தாங்கள் யாழ் நகரில் தங்கிஇருந்து பணியாற்றியமையை சிலர் குறிப்பிடுவார்கள். அந்த அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

1997ஆம் ஆண்டு கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நிதியாளராகவும் ஆரம்ப மெய்யியல் பிரிவினருக்குப் பயிற்றுவிப்பாளராகவும் பாட ஆசிரியராகவும் இருந்த போது இடப்பெயர்வு ஏற்பட்டு குருமடம் கிளிநொச்சிக்கும் பின்னர் மடுவிற்கும் இடம் பெயர்ந்தது. அங்கிருந்த போது ஆயர் என்னை பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு ஒரு மாதப் பயிற்சிக்கு அனுப்பினார். அங்கிருந்து வந்தவுடன் இராணுவத்தினரிடமிருந்து கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியை மீட்பதற்குப் புனித மாட்டீனார் குருமடத்தில் இருந்து ஆரம்ப மெய்யியல் பிரிவிற்கு தகுதிபெற்ற அருட்சகோதரர்கள் இயேசுதாசன் மதி இளம்பருதி, அருளானந்தம் அன்ரன் ஸ்ரீபன், தார்சியஸ் நிருபன், ஈ.எஸ்.சி.மரியதாஸ், நீக்கிலஸ் லெஸ்லி அன்ரனி, எழில்ரஜன், எம்.எல். தயாகரன் ஆகிய 07 மாணவர்களுடன் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் ஆரம்ப மெய்யியல் பிரிவை ஆரம்பிக்குமாறு ஆயர் வேண்டினார். நான் அந்த 07 சகோதரர்களுடன் வளன்புரத்தில் குருத்துவப் பயிற்சி வாழ்வை ஆரம்பித்தோம். அமல மரித்தியாகிகளின் வளன்புரம் சிறிய குருமடத்தில் 07 மாணவர்களுடன் எட்வின் வசந்தராஜா அ.ம.தி அடிகளார் இருந்தார். எம்மையும் இராணுவத்தினரையும் விட அப்பகுதியில் யாரும் அப்போது இருக்கவில்லை. நாட்கள் பல சென்றும் இராணுவத்தினர் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியை விட்டு வெளியேறாதபடியாலும் இராணுவத்தினர் இரவு வேளைகளில் வளன்புரத்தில் உள்ள எமது இல்லத்திற்கு வந்து தொல்லை தந்தபடியாலும் நாம் ஆயரின் அனுமதியுடன் வளன்புர இல்லத்தை விட்டு கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் குடியமர்ந்தோம்.

**அதாவது கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இராணுவத்தினருடன் நீங்களும் ஏழு சகோதரர்களுடன் ஒன்றாக இருந்த அனுபவத்தினைப் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

புனித சவேரியார் கல்லூரியின் இறையியல் பகுதியில் நாம் இருந்தோம். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் கல்லூரியின் மெய்யியல் பகுதியில் இராணுவத்தினர் இருந்தனர். இது பலரும் கேள்விப்படாத செய்தி. இராணுவத்தினருடன் ஆரம்ப மெய்யியல் பிரிவினருடன் நான் சில காலம் தங்கியிருந்த இந்த செய்தி பெரிதும் அறியப்படாத ஆனால் உண்மைச் செய்தியாகும். மாலை வேளைகளில் அமலமரித் தியாகிகளின் புனித சூசையப்பர் சிறிய குருமட கூடைப்பந்தாட்டத் திடலில் நாம் விளையாடுவது உண்டு. அந்தத் திடலின் கடற்கரைப் பகுதி மதில் முழுவதும் இராணுவத்தினரால் இடிக்கப்பட்டிருந்தது. பாசையூரில் இருந்த இராணுவக் கப்டன் றம்புக்கனையும் எம்முடன் வந்து விளையாடுவார். இதனால் இராணுவத்தினருடன் ஒன்றாக இருக்கும் பயம் ஓரளவு நீங்கியது. இராணுவத்தினருடன் நாம் இருந்த நாட்கள் மறக்கப்பட முடியாத நாட்கள். பின்னர் ஆயர் இராணுவ மேலிடத்துடன் தொடர்பு கொண்டதன் பயனாக அவர்கள் பகுதி பகுதியாக வெளியேறினார்கள்.

ஒரு நாள் இவ்வாறு நாம் விளையாடிக் கொண்டிருக்கும் போது அவ்வீதியால் கொழும்புத்துறை சவேரியார் குருத்துவக் கல்லூரியை நோக்கி ஆயர் கறுத்தப் பட்டியுடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். உடனடியாக வேகமாக ஆயரின் பின்னால் ஓடிச் சென்றேன். அவர் உடனேயே உம்மைப் பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராக நியமிக்க விரும்புகிறேன். நீர் உடனேயே மத்தாயஸ் அடிகளாரிடம் இருந்து பொறுப்புக்களை பெற்றுக் கொள்ளும் குருத்துவக் கல்லூரி இங்கு வந்ததும் நீர் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் பணியை முழுமையாக செய்யலாம் என்றார். அவ்வாறுதான் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர்பணி எனக்குத் தரப்பட்டது.

**பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகப் பத்து ஆண்டுகள் பணியாற்றியுள்ளீர்கள். அதன் இயங்கியலில் புரிந்த சாதனைகள் எவை எனக் கருதுகிறீர்கள்?**

01) பங்குகளில் இருந்து பாதுகாவலனுக்கு பத்திரிகையாளர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கும் மற்றப் பத்திரிகையாளர்களுக்கும் பத்திரிகையியல் பயிற்சிகளை ஆண்டு தோறும் வழங்கினேன். அந்தப் பயிற்சிகளுக்கு வழங்கிய பாடக்குறிப்புக்களைப் புத்தகங்களாக வெளியிடத் தொடங்கினேன். இந்தப் புத்தக வெளியீட்டுப் பணியே யாழ் பல்கலைக்கழகத்தின் 72 இலட்சம் ரூபா புலமைப் பரிசில் பெற்று இலண்டனில் ஆய்வுக் கல்வியை மேற்கொள்ளவும் யாழ் பல்கலைக்கழகம் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் ஊடக விரிவுரைப் பணிகளை ஆற்றவும் வழிசமைத்தது.

02) பாதுகாவலன் பத்திரிகையாளர்களை மாதத்தின் ஒவ்வொரு முதல் சனிக்கிழமைகளிலும் ஒரு வானில் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று நேரடியாகச் செய்திசேகரிக்கும் களப்பயிற்சியை வழங்கினேன். அவை எல்லாம் செய்திகள் மற்றும் நேர்காணல்களாகப் பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது.

(03) எனது சிறிய குருமட நாட்களில் நான் எழுதத் தொடங்கிய தவக்கால சிந்தனை என்ற பகுதியை பாதுகாவலன் பத்திரிகையாளர்களுக்கு அறிமுகப்படுத்தி ஆண்டு தோறும் வெளிப் பத்திரிகைகளில் தவக்கால சிந்தனைகள் வெளிவர வழிவகுத்தேன்.

(04) நூற்றாண்டு காலமாய் ஒரு இலச்சினை இன்றி வெளிவந்து கொண்டிருந்த பாதுகாவலன் பத்திரிகைக்கு முதற் தடவையாக ஒரு இலச்சினை உருவாக்கினேன். அதில் ஒளியும் வாழ்வும் உண்மையும் பாதுகாவலன் என்ற வசனங்கள் பொறிக்கப்பட்டு வேதாகம ஏட்டின் மேல் தீபம் ஒன்று அமைக்கப்பட்டு அது உலகிற்கு ஒளி தருவது போலவும் அந்த ஒளியினை இரண்டு கரங்கள் பாதுகாவலனாய் அணைந்து போகாமல் பாதுகாப்பது போலவும் அமைத்தேன். யாழ்ப்பாணம் என்பதைக் குறிக்க இரண்டு பனை ஓலைகள் கீழே இரண்டு பக்கமும் அமைத்தேன்.

**காவலூர் யோவான்**

(05) 1991 ஆம் ஆண்டுவரை வாரப் பத்திரிகையாக வெளிவந்து பின்னர் மாற்றப்பட்ட பாதுகாவலன் பத்திரிகையை 23 மே 2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரும்பவும் வார இதழாக வெளியிட்டேன். இருப்பினும் அம்முயற்சியை தொடர முடியவில்லை.

(06) 1998ஆம் ஆண்டு யூன் மாதம் முதல் பாதுகாவலன் பத்திரிகை ஓவ் செற் அச்சுப்பதிவு முறையில் வெளிவரத்தொடங்கி யாழ்ப்பாணத்தில் இவ்அச்சு முறையில் வெளிவரத் தொடங்கிய முதல் பத்திரிகையாக தன்னைப் பதிவு செய்து கொண்டது.

(07) ஐரோப்பிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கும் பாதுகாவலன் விற்பனையை விரிவுபடுத்தினேன்.

(08) 2001 ஆம் ஆண்டு எனது ஆசிரியப் பணி காலத்தில் இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் சிறந்த வடிவமைப்பிற்கான தேசிய விருதைப் பாதுகாவலன் பத்திரிகை பெற்றது.

(09) 2001 ஆம் ஆண்டு பாதுகாவலன் பத்திரிகை 125 ஆவது ஆண்டு நிறைவை மலர் வெளியீட்டுடன் கொண்டாடியது. யாழ்ப்பாணப் பத்திரிகைகள் தமக்கிடையில் போட்டியையும் பொறாமையையும் அதிகம் கொண்டிருந்த அக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் எல்லாப் பத்திரிகை ஆசிரியர்களையும் பாதுகாவலன் மேடையில் அமரச் செய்தேன். அப்போது உதயன் பத்திரிகை ஆசிரியர் ந.வித்தியாதரன் 'ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் அமைத்த பாதுகாவலன் மேடையில் தான் யாழ்ப்பாணத்தின் எல்லாப் பத்திரிகை ஆசிரியர்களும் தமது வேற்றுமைகள் மத்தியில் அமர முடியும்' எனப் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

(10) பாதுகாவலன் பத்திரிகையின் 125 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தின் போது வலம்புரிப் பத்திரிகை பாதுகாவலன் பத்திரிகை பற்றியும் அதில் எனது பணி பற்றியும் பாதுகாவலன் பணி ஓங்குக என்ற தலைப்பில் ஓர் ஆசிரியர் தலையங்கம் எழுதிக் கௌரவப்படுத்தியது. (வலம்புரி ஆசிரியர் தலையங்கம் 04 - 08 - 2011)

(11) 2003ஆம் ஆண்டு மீண்டும் இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் சிறந்த பிரதேச ரீதியாக வெளியிடப்படும் பத்திரிகை என்ற தேசிய விருதைப் பாதுகாவலன் பத்திரிகை பெற்றது.

(12) 2003ஆம் ஆண்டு கத்தோலிக்க அச்ச கட்டிடத் தொகுதி என்ற பெயரில் புதிய அலுவலகம் மற்றும் வாடைக்கு விடப்படும் கட்டிடம் கட்டித் திறந்து வைக்கப்பட்டது.

(13) 2006ஆம் ஆண்டு கத்தோலிக்க அச்சவளாகத்தில் அமரர் இ.யே.அருமைநாயகம் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட கீழ் மாடிக் கட்டடம் முழுமையாக்கப்பட்டு பழைய கட்டிடத்தில் இருந்து அச்சக இயந்திரங்கள் அனைத்தும் புதிய கட்டிடத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதன் மேல் மாடி கட்டி முடிக்கப்பட்டு வாடகைக்கும் மற்றைய தேவைகளுக்கும் கொடுக்கப்படக்கூடிய பாதுகாவலன் மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

2007ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக புலமைப்பரிசிலுடன் ஊடகவியல் ஆய்வுக் கல்விக்காக லண்டன் மாநகர் சென்றதோடு எனது 1997-2007 பத்து ஆண்டு கால பாதுகாவலன் ஆசிரியப் பணி நிறைவானது.

**தொடர்ந்தும் எழுதிவருகின்ற உங்களது எழுத்துப் பணிகள்பற்றி அறிய முடியுமா?**

உதயன் பத்திரிகையில் 2015-2019 வரை ஒவ்வொரு ஞாயிறு தோறும் கிறிஸ்தவ செய்தி இதழ் என்ற ஒரு கட்டுரைப்பக்கத்தை நடத்திவந்துள்ளேன். 2021 ஆம் ஆண்டு முதல் இது மாற்றப்பட்டு ஒவ்வொரு சனிக்கிழமைகள் தோறும் உதயன் பத்திரிகையில் கத்தோலிக்க செய்தி இதழ் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதனைவிட காலைக்கதிர் பத்திரிகையில் 2016ஆம் ஆண்டு முதல் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் என்னும் பெயரில் ஒவ்வொரு ஞாயிறு தினமும் ஒரு செய்திப் பக்கத்தை நடத்தி வருகின்றேன். இருப்பினும் என்னை எழுத்துத்துறைக் கும் ஊடகத்துறைக்கும் அறிமுகப்படுத்தி வளர்த்து விட்ட பாதுகாவலன் பத்திரிகையை எனது பத்திரிகையாகவே என்றும் கருதிப் பணியாற்றுகிறேன்.

இன்றைய பாதுகாவலன் ஆசிரியர் எஸ்.ஏ.றொசான் அடிகளார் பல வழிகளில் பாதுகாவலனை வளர்க்க முயன்று வருகிறார். அண்மையில் ஒரு ஆலோசனைக் கூட்டம் ஒன்றையும் அமைத்துள்ளார். அவரின் காலத்தில் பாதுகாவலன் மேலும் வளர வாழ்த்துகிறேன்.

## காவலன் கலசம்

**வணக்கமாத சிறப்புக் கட்டுரை**



# துயர்களின் அன்னையே!
# இப் பெருந்தொற்றுக் காலத்தில் எம் துயர் தீராயோ!!

**"சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர்." – யோவா 19:25**

மானிட வரலாறு துன்பங்களின் தொடர்கதையே என்கிறார் ஜெர்மனி நாட்டு இறையியலாளர் மோல்ட்மான். ஆம், மானிட சமூகங்கள் அமைதியிலும் வளமையிலும் மகிழ்ந்திருந்த காலங்களைவிட போர்களாலும் வறுமையாலும் பெரும் தொற்று நோய்களாலும் ஆதிக்கங்கள் அடக்குமுறைகளாலும் துன்புற்ற காலங்களே அதிகம்.

Guzo akang Gananangó மிகச் சிறுபான்மையினரான ஆதிக்கக் குழுக்கள் எல்லா சமூகங்களிலும் பொதுவாக வளமாகவும் இன்பமாகவும் வாழ்ந்துள்ளன. இயற்கைச் சீற்றங்களோ, பஞ்சம், கோவிட் -19 பெரும் தொற்று, போர்களோ, அரசியல் மாற்றங்களோ அவர்களை அதிகம் பாதிப்பதில்லை. அவற்றால் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் பெரிதும் சாதாரண மக்களே.

மரியா அத்தகைய பாமர, சாதாரண மக்கள் சமூகத்தையே சார்ந்தவர்.அன்றைய பாலஸ் தினத்தில் கொலுவேறியிருந்த உரோமானியரின் அரசியல் ஆதிக்கம், பொருளாதாரச் சுரண்டல், கலாசார புறக்கணிப்பு என்பவற்றால் அதிகம் பாதிக்கப்பட்டு, 'புழுதியின் மக்கள்' என அன்றைய பரிசேய, சதுசேய, குழுவினரால் இழிவாகக் கருதி ஒதுக்கப்பட்ட சமூகத்தினரே அவர். பசி, வேலை யின்மை, பாதுகாப்பு இன்மை, விடுதியில் கூட இடம் இன்மை, எகிப்திற்கு அகதி யாக ஓடவேண்டிய நிலை என்பவற்றையெல்லாம் அனுபவித்திருந்தவர் அவர். அனைத்திற்கும் மேலாக, "எங்கும் நன்மை செய்துகொண்டே சென்ற" (திப 10:38) தம் ஒரே மகன் அநீதியாகச் சிலுவைச் சாவிற்குத் தீர்ப்பிடப்பட்டு, கொடூரமாகக் கொல்லப்படும் கோரத்தையும் கண்டனுபவித்து இதயமே இடிந்து போனவர் அவர். தமக்கு ஏற்பட்ட அத்தகைய துன்பங்களையும் துயர்களையும் மரியா எதிர்கொண்ட முறை நமக்குப் பல பாடங்களைச் சொல்கிறது.

> **"** *கடவுளை நம்புவது என்பது அவரைப் போலவும், அவருடன் ஒன்றுபட்டும் மக்களின் கண்ணீரைத் துடைக்கும், கவலைகளைப் போக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதுதான். இத்தகைய செயற்படும் நம்பிக்கையே' உண்மையான இறை நம்பிக்கை என்பது மரியாவின் உறுதிப்பாடு.* **"**

முதலில், அவர் தம் துன்ப துயரங்களை மட்டுமே நினைந்து, உள்ளம் நைந்து, சுய கழிவிரக்கத்தில் மூழ்கிவிடவில்லை . மாறாக, அன்றைய அவருடைய சமூகத்தில் அவரைப்போல வாடி வருந்திக் கொண்டிருந்த எண்ணற்ற மக்களின் துன்ப துயர்களை உற்று நோக்கவும் அவர்களின் வேதனை விரக்தி உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் அவை அவருக்கு உதவின. மேலும், அவர்களுடன் அவர் தம்மை ஒன்றுபடுத்தி, அவர்களுடன் கூட்டுத் தோழமை கொள்ளவும் அவை காரணமாயின.

அடுத்து, இத்தனைத் துன்பதுயரங்கள், வேதனை விரக்திகளை மரியா இயற்கையின் நியதி என்றோ, மாற்றமுடியாத தலைவிதி என்றோ,இறைவ னின் விருப்பம் என்றோ எளிதில் ஏற்றுக் கொண்டவர் அல்ல. மாறாக, அவையெல்லாம் மாற்றப்படவேண்டும் இறைவனின் மக்களுக்கு உரிய உரிமையோடும் உறவோடும் மாண்போடும் மகிழ்வோடும் எல்லாரும் வாழும் புதியதொரு சமூகம் உருவாக்கப்பட வேண்டும் என்பது அவரது கனவு மட்டுமல்ல, அவரது இறைநம்பிக்கையில் மலர்ந்த உறுதியான எதிர்நோக்காகவும் இருந்தது. ஏனெனில், அவர் நம்பிய கடவுள் இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வளங்களோடும் உரிமைகளோடும் வாழ்வதற்காக அவர்களைப் 'பாலும் தேனும் வழிந்தோடும் பாலஸ்தினப் பகுதியிலே குடியமர்த்தியவர். கடந்த காலத்தில் மட்டும் அல்ல, இன்றும் தொடர்ந்து அவர்கள் வரலாற்றில் வல்ல செயல்கள் ஆற்றி அவர்களை வாழ்விப்பவர் அவர்.

அவரை நம்புவது என்பது அவரைப் போலவும், அவருடன் ஒன்று பட்டும் மக்களின் கண்ணீரைத் துடைக்கும், கவலைகளைப் போக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதுதான். இத்தகைய 'செயற்படும் நம்பிக்கையே' உண்மையான இறைநம்பிக்கை என்பது மரியாவின் உறுதிப்பாடு. : இதனால்தான் மரியா தம் துன்பங்களை அல்ல, பிறர் துன்பங்களைப் போக்குவதையே முதன்மைப்படுத்தினார். அப்பணிக்குத் தம் மகனை அனுப்புவதால் தமக்கு ஏற்படும் இன்னல்களையும் இழப்புகளையும் அறிந்திருந்தும் அவரை அப்பணிக்கு அர்ப்பணிக்கிறார். ஆம், "ஒரு வாள் உமது உள்ளத்தை ஊடுருவும்..." (லூக் 2:35) எனும் சிமியோனின் இறைவாக்கைக் கேட்டிருந்தும் தயக்கமோ தடுமாற்றமோ இன்றி மக்களின் துயர் போக்கும் பணிக்குத் தம் மகனை அர்ப்பணித்து, சிலுவை வரை மரியாவும் அவர் பணியில் பங்கேற்கிறார். இத்தகைய மரியாவை நம் நம்பிக்கைப் பயணத்தில் முன்னோடியாகக் கொண்டிருப்பவர்கள் நாம், அவரது உறுதிப்பாடுகளையும் செயற்பாடுகளையும் நாமும் கொண்டிருப்பது அவசியம். அதாவது துன்ப துயரங்களை, அதுவும் பிறருடையவற்றை இறைவனின் சித்தம்', 'பாவத்திற்குத் தண்டனை' என நாம் நியாயப்படுத்தி, எத்தகைய எதிர்செயற்பாடும் இன்றி ஏற்றுக்கொள்ளுதல் நம்பிக்கையின் நலமான நடைமுறை அன்று. மாறாக, அவற்றைக் களையும் முயற்சிக்கு நம்மையே நாம் அர்ப்பணிப்பதே உயிருள்ள நம்பிக்கையின் உண்மையான செயற்பாடு.

> **பிறர் காயங்களைக் குணமாக்குவதால் தான் நம் காயங்கள் ஆறுகின்றன. பிறர் பாரங்களைப் பகிர்ந்து கொள்வதால்தான் நம் சுமைகளும் எளிதாகின்றன. பிறர் வாழ்விற்கு அர்த்தம் தருவதால்தான் நம் வாழ்வுகளும் அர்த்தம் பெறுகின்றன. பிறர் பாதைக்கு விளக்கேற்றுவதால், தாள் நம் பாதைகளும் ஒளிபெறுகின்றன.**

ஏனெனில், பிறர் காயங்களைக் குணமாக்குவதால்தான் நம் காயங்கள் ஆறுகின்றன் பிறர் பாரங்களைப் பகிர்ந்துகொள்வதால்தான் நம் சுமைகளும் எளிதாகின்றன. பிறர் வாழ்வுகளுக்கு அர்த்தம் தருவதால்தான் நம் வாழ்வும் அர்த்தம் பெறுகின்றது் பிறர் பாதைக்கு விளக்கேற்றுவதால்தான் நம் பாதைகளும் ஒளிபெறுகின்றன. மேலும், பிறர் துன்ப துயர்களை நீக்க முயல்வதால்தான் நாமும் மரியாவைப் போல் இயேசுவின் பாடுகளில் இணைந்து அவரது மாட்சியிலும் பங்கு பெறுவோம்.

# இல்லற வாழ்வுக்கு அன்னை மரியாள் மாதிரி

**"அப்பொழுது அவருடைய (இயேசுவின்) தாய் அவரை நோக்கி, "மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார், உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடுதேடிக் கொண்டிருந்தோமே' என்றார்."** - லூக் 2:48

மரியாவை நாம் 'இறைவனின் தாய்' என அழைக்கிறோம், போற்றுகிறோம். ஆனால் தேவதாய் என்பதற்குத் தரும் அளவிற்கு முக்கியத்துவத்தை அவர் ஒரு மானிடத் தாய் என்பதற்கு நாம் தருவதில்லை. அவரது விண்ணக மாட்சியை வியந்து போற்றும் அளவுக்கு அவரது மண்ணக வாழ்வின் அர்த்தங்களை, அழகுகளை நாம் அதிகம் கண்டு கொள்வதில்லை. மேலும், துறவிகளுக்கெல்லாம் மாதிரியாக அவரைக் காட்டும் நாம் அவரது இல்லற வாழ்வின் சிறப்புகளைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை .

ஆனால், மரியா துறவறக் கோலம் பூண்டவர் அல்ல. மாறாக, அவர் இல்லறவாழ்க்கை நடத்தியவர். அதாவது, அவர் பண்புமிகு மனைவி, பாசமிகு அன்னை, பொறுப்பு மிகுந்த குடும்பத் தலைவி. நல்ல மனைவி தம்மை அல்ல, தம் கணவனை முன்னிலைப்படுத்தி வாழ்பவர் அவனுடைய தேவைகளை அறிந்திருப்பவர் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டவர் அவனுடைய இன்ப துன்பங்களில் பங்குபெறுபவர் அவனுடைய ஆர்வங்கள் - அக்கறைகளில் தம்மை இணைத்துக் கொள்பவர் அவனுடைய முயற்சிகள் தளர்ச்சிகளில், வெற்றிகள் தோல்விகளில் உடனிருந்து ஊக்கமளிப்பவர். இதற்கேற்பவே மரியா தமக்குப் பேறுகாலம் எனினும் தம் கணவர் யோசேப்புடன் பெத்லகேம் செல்கிறார் அங்கிருந்து எகிப்துக்கும் பின்பு நாசரேத்துக்கும் கணவருடன் பயணிக்கிறார் இயேசுவுக்கு 12 வயதில் அவருடனும் கணவர் யோசேப்புடனும் எருசலேம் வருகிறார் அங்கு காணாமற்போன மகனை அவருடன் 3 நாட்கள் தேடியும் அலைகிறார். இறுதியில் கோவிலில் அவரைக்கண்டபோது தம் கணவர் யோசேப்பின் அங்கலாய்ப்பையும் அலைச்சலையுமே முதன்மைப்படுத்துகிறார் (லூக் 2:48). அதுபோல நல்ல அன்னையாகவும் மரியா விளங்குகின்றார். இயேசுவைப் பெற்றெடுத்து, பேணி வளர்த்ததுடன் அவரைப் பாதுகாக்க எகிப்து நாட்டுக்கு ஓடிச்சென்று, அங்கு அகதியாக வாழவும் அவர் தயங்கவில்லை. மேலும், கோவில் அறிஞர்களே மலைத்துப் போகும் அளவுக்கு (லூக் 2:47) ஞானம் உள்ளவராக அவரை வளர்க்கிறார் சுதந்திரமாகச் சிந்திக்கவும் கேள்விகள் கேட்கவும் தக்க பதில்கள் தரவும் தேவையான துணிச்சலையும் அறிவையும் அவருக்கு ஊட்டுகிறார். கோவிலில் தங்கி, மூன்று நாட்கள் தங்களைப் பெரும் அங்கலாய்ப்புக்கும் அலைச்சலுக்கும் ஆளாக்கிவிட்ட தம் மகனிடம் ஆத்திரம் கொள்ளாது, 'மகனே ஏன் இப்படிச் செய்தாய்' என நிதானமாக விசாரித்து, அவர் கூறும் விளக்கத்தையும் பொறுமையுடன் கேட்கிறார். எனினும், கனிவு கலந்த கண்டிப்புடன் அவரை வீட்டிற்கு அழைத்து வந்து, தந்தைக்கும் தமக்கும் பணிந்து நடக்கச் செய்கிறார். அனைத்திற்கும் மேலாக, இறையாட்சி இலட்சிய உணர்வை அவர் இதயத்திலே வளர்த்துவிட்டு, கானாவூர்த் திருமண விருந்தின்போதுஅவரது தயக்கத்தைப் போக்கி, பணியைத் தொடங்க அவரைத் தூண்டுகிறார். இவ்வாறு, தம் மகனாக மட்டுமல்ல, இறைமகனாகவே அவரை வளர்த்துவிடுகிறார்.

இவ்வாறு, மரியாவின் ஆன்மீகம் அன்றாட உலகிய உறவுகள் ஈடுபாடுகளின் ஆன்மிகம். அதாவது, அது குடும்ப வாழ்வின் உறவுகள், கடமைகளை இறை அருளுடன் தொடர்பு அற்றவையென ஒதுக்கி, பக்திச் செயற்பாடுகளில் மட்டுமே இறையனுபவம் பெற விழையும் போலிச் சமய ஆன்மீகம் அல்ல. மாறாக, சமைத்தல், சலவைசெய்தல், வீட்டைப் பெருக்குதல், கணவனைப் பேணுதல், குழந்தையைப் பெற்று வளர்த்தல் எனும் இல்லற வாழ்வின் அன்றாட சாதாரண கடமைகளின் சலிப்புகளிலும் பரவசத்திலும் மலர்ந்த ஆன்மீகமே மரியா கடைப்பிடித்தது. - அன்றாட இறைவேண்டல்கள், வாராந்திர தொழுகைக்கூட வழிபாடு போன்ற சமயச் செயற்பாடு களுக்கும் மரியாவின் ஆன்மீகத்தில் நிச்சயம் இடம் உண்டு, ஆனால், அவற்றின் உதவியுடன் உலகிய ஈடுபாடுகளில் தெய்வீகத்தைக் காணும் புனிதமே அவரது ஆன்மீகம். அன்பு, தியாகம், பொறுமை, பொறுப்புணர்வு எனும் நற்பண்புகள் இருந்தால் இல்லற வாழ்வின் அனுபவங்களும் இறை அனுபவங்கள் ஆகமுடியும் அதன் உறவுகளும் ஈடுபாடுகளும் அருளின் வாய்க்கால்கள் ஆகி நம்மைப் புனிப்படுத்துவோம்.


# காவலன் கலசம்

## உணர்வுகளை மதிக்கும் அறிவியலை பலமாக்குவோம்

அறிவை ஆழமாகத் தேடமுனைந்தோம் ஆனால்
ஆன்மீகத்தை ஆத்மாவில் தொலைத்து விட்டோம்
விஞ்ஞானம் உணர்வு என எண்ணியே
மெஞ்ஞானத்தை மறந்தே வாழ்ந்தோம்
இயற்கையைத் துறந்து நாங்கள்
செயற்கைக்கு அடிமையானோம்
ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அதுமட்டும் வளர்ந்தால் போதுமா?
அறிவும் உணர்வும் ஆன்மீகமும் இணைந்தாலே
ஆளுமையுள்ள முழுமனித வளர்ச்சிகளாம்
இறைவன் தந்த மறு உருவுக்கு மதிப்பளித்து
ஆன்மீக மெய்யறிவும், அன்பு உறவும்
உணர்வுடனான நல்லுறவும் வளரவேண்டும்
அயலில் இருந்து அன்னியமான உறவுகள்
மண்ணாசையால் பொன் பொருளாசையால்
உதவி செய்தவர்களாலேயே உதறிய பொழுதுகள்
உணர்வுகளை மதிக்காத சுயநலச் செயல்களே
சோதிக்கும் இயற்கைக்கு சோரம் போகிறோம்
இயற்கையைப் பகைத்தால் இயற்கையே அழிக்கும்
இவை இயற்கை தந்த பாடம் படித்தோம்
வானுயர மாடிகள் கண்டோம்
வாய்ப்புக்கள் தந்த உறவுகளை மறந்தோம்
பணங்களைத் தேடி நல்ல மனித உணர்வுகளை
மீண்டும் பண்பாட்டுப் பழக்க வழக்கத்துடன் தொலைந்தோம்
இறை உறவில் ஆத்மாவைச் சுத்தப்படுத்த
வழிபாட்டை வாழ்வாக்கும் பிறரன்புப் பணிகளில்
உணர்வுகளை மதிக்கும் அறிவியலை வளர்த்து
ஆன்மீகத்தைப் புதுப்பித்து
அன்புறவைப் பலமாக்குவோம்.

**கலாபூஷணம்**
**செ.யோசப்பாலா**

## அமரத்துவம் அடைந்த மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் பங்குக்குச் செய்த அளப்பெரிய நன்மைகள்



அவர் தனது பணிவாழ்வில் 10 வருடங்களை எங்களுடன் செலவு செய்தது. அக்காலத்தில் மறக்க முடியாத அளவிற்குப் பல தடயங்களையும் பதித்துச் சென்றுள்ளார். அருட்பணி ஞானப்பிரகாசியரால் ஆரம்பிக்கப் பட்ட எமது ஆலயமானது எட்டு தசாப்தங்களைக் கடந்து பல சேதங்களுடன் காணப்பட்டது. ஆயினும் இவற்றைத் திருத்துவதற்கே எமது பங்கால் முடியவில்லை. ஏனெனில் எமது பங்கு சிறியதாகக் காணப்பட்டதுடன், இங்கு வாழ்ந்த மக்களும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டனர். அப்போதுதான் எமது பங்கிற்கு ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார்.

அவர் இவ் ஆலயத்தைப் புதிதாக நிர்மாணிக்க ஆயத்தமானார். ஆயினும் எல்லோருக்கும் ஒரு சந்தேகம் எங்களால் திருத்த முடியவில்லை. இவரால் கட்டி முடிக்க முடியுமா? என்று. ஆனால் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள் பங்கு மக்களின் பங்களிப்போடும், வெளிநாட்டில் உள்ள கிறிஸ்தவர்களின் அன்பளிப்போடும் குறுகிய காலத்தில் தமிழ் மக்களின் கலாசாரத்திற்கேற்ப ஒரு புதிய ஆலயத்தைக் கட்டி முடித்தார். அது மட்டுமல்லாமல் எமது அயல் ஆலயமாகிய புனித திரேசம்மாள் ஆலயத்தையும் அவ்வாறே கட்டி முடித்தார்.

1987 இல் குண்டுமழை பொழிந்தவாறு இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறியது. அப்போது மக்கள் எல்லோரும் தஞ்சமடைய இடம்தேடி அலைந்தார்கள். ஆயினும் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தைச் சூழ வந்த மக்கள் மதவேறுபாடின்றி இவ் ஆலயத்தில் தஞ்சம் புகுந்தார்கள். அவர்களைப் பாதுகாக்கும் நோக்கோடு அருட்தந்தை இராயப்பு யோசப் அவர்கள் மக்களோடு தங்கியிருந்து அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொடுத்தார். இராணுவம் ஆலயத்தை நெருங்கியபோது இராணுவ அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு அங்குள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார். எமது பங்கில் 32 ஆவது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து சிறப்பாக செயற்பட்டு வருகின்ற புனித வின்சென்டி போல் சபையினை இவரே 01.11.1989 இல் ஆரம்பித்து வைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும்துணைப் பங்காக இருந்த எமது பங்கை ஒரு தனிப் பங்காக நிரந்தர குருவைப் பெற்றுக்கொள்ள வழி அமைத்துக் கொடுத்தவரும் இவரே. அது மட்டும் அல்லாமல் இங்கு வாழ்ந்த மக்களின் ஒவ்வொரு தேவைகளையும் அறிந்து அவற்றை உடனடியாகத் தீர்த்து வைக்க தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டார். இந்நிலையில் 1992 ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்ட ஆயராக மேதகு யோசேப்பு ஆண்டகை திருநிலைப்படுத்தப்பட்டார். ஒரு பங்கில் ஆற்றிவந்த பணி ஒரு மறைமாவட்டத்திற்கு விரிவு படுத்தப்பட்டது.

இவ்வேளையில்தான் இலங்கையில் போர் உச்சக்கட்டத்தை அடைந்தது. அவ்வேளை மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைத் தட்டிக் கேட்டதுடன், இவற்றை ஆதாரங்களுடன் பகிரங்கப்படுத்தினார். இதனால் அவரின் உயிருக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டது. ஆயினும் அவர் அஞ்சவில்லை. மன உறுதியோடு தனது பணியை ஆற்றி வந்தார். அவர் மன்னார் மறைமாவட்ட ஆயராக இருந்தாலும் யாழ்ப்பாணம் வந்தால் நல்லூர் சென் பெனடிற் ஆலயத்தை வந்து பார்க்காமல் போவதில்லை. நாங்கள் எங்கள் திரு அவையில் பெரியதொரு தலைவரை இழந்து தவிக்கிறோம். எங்கள் திரு அவைக்கும் தமிழ் மக்களுக்கும' தன்னாலான முழு உதவியையும், நீதி, நேர்மை, மன உறுதியுடன் ஆற்றி வந்தார். அவரது ஆன்மா இறைவனில் இளைப்பாற இரக்கத்தின் ஆண்டவரிடம் வேண்டிடுவோம்.

## அருட்தந்தை சறத்ஜீவன் நிதியம்

### - ஒரு கண்ணோட்டம்



அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் 2013ம் ஆண்டு தொடக்கம் போரால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களைச்சேர்ந்தவர்களுக்கு பலவகையான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இவ் உதவிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அருட்தந்தை சறத்ஜீவன் நிதியம் 2013ம் ஆண்டு, முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் கடைசி நாளான 18ம் திகதி மே மாதம் உணவின்மையால் ஏற்பட்ட மாரடைப்பால் மரணித்த அருட்தந்தை சறத்ஜீவன் அடிகளார் நினைவாகத் தொடங்கப்பட்டது.

அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தின் இயக்குநராக அருட்தந்தை கி.ஜோ.ஜெயக்குமார் அடிகளாரும், பொருளாளராக அருட்தந்தை செ. யூட் அமலதாஸ் அடிகளாரும், செயலாளராக செல்வி நித்திலா மரியாம்பிள்ளையும், இயக்குனர் சபை உறுப்பினர்களாக அருட்தந்தை ஜெரிபல் கிருபாகரன் அடிகளாரும், செல்வி நிக்கொலின் சாமிநாதர் அவர்களும் கொண்ட நிர்வாக சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

தற்போது, 99 மாணவர்களுக்கான கல்வி உதவியாக மாதாந்தம் ஒவ்வொருவருக்கும் குறைந்தது ரூபா. 1000.00 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. பொதுவாக தரம் 5ல் கற்கும்மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் க.பொ.த உயர்தரம் பூர்த்தியாக்கும் வரை இந்த மாதாந்த உதவி வழங்கப்படுகிறது. மேலும் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மாதாந்தக் கல்வி உதவி வழங்கப்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர்களுக்கு ரூபா. 3000.00 தொடக்கம் 4000.00 மாதாந்தம் அவர்களின் வங்கிக் கணக்கிற்கு வைப்பிலிடப்படுகிறது. உருத்திரபுரம், பூநகரி, மல்லாவி, இரணைப்பாலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், அச்சுவேலி, உரும்பிராய், நாரந்தனை, இலுப்பைக்கடவை, தட்சனா மருதமடு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த 99 மாணவர்கள் தற்போது பயனடைகிறார்கள்.

மேலும் வாழ்வாதார உதவிகள், (ஆடு, கோழி வளர்ப்பு, தையல் இயந்திரம், மீன்பிடி வலைகள்) மருத்துவ உதவிகள், மாற்று வலுவுள்ளோருக்கானவிசேடமாக வடிவமைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், சக்கர நாற்காலி, மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள்,மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், வறிய பிள்ளைகளுக்கான உடைகள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் கற்பதற்கான மேசை, கதிரை மற்றும் குடி தண்ணீர் பற்றாக்குறையாக உள்ள பூநகரி பிரதேசத்திலுள்ள 5 குடும்பங்களுக்கு தண்ணீர் தாங்கிகள், கொவிட் 19 எனப்படும் கொரோனாத் தொற்று காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இரணைப்பாலை பற்றிமா பாடசாலைக்கு ஆங்கில மொழிக் கற்கைக் கூடத்திற்கான கணினி மற்றும் இலத்திரனியல் உபகரணங்களும் வழங்கபட்டுள்ளது.

இந் நிதியத்திற்கான நிதி உதவிகளை உள்நாட்டிலும் புலம் பெயர் தேசங்களிலுமுள்ள நண்பர்கள், உறவினர்கள் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**2020ம் ஆண்டு வழங்கப்பட்ட சில உதவிகள்:**

பூநகரியில் உள்ள ஐந்து வறிய குடும்பங்களுக்கு அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் ரூபா.29,000 பெறுமதியான 5 தண்ணீர் தாங்கிகள் ஆகஸ்ட் மாதம் அன்பளிப்பு செய்யப்பட்டது. கனடாவில் வசிக்கும் திரு. நியூட்டன் என்பவரால் அவரது பெற்றோரின் 60 ஆவது திருமண நாள் நினைவாக இவை அன்பளிப்பு செய்யப்பட்டன.

நாவாந்துறையைச் சேர்ந்த வறிய குடும்பத்தை சேர்ந்த, க.பொ. த உயர் தரத்தில் கல்விகற்கும் மாணவனுக்குப் படிப்பதற்கான மேசையும் கதிரையும் ரூபா. 6,000 பெறுமதியில் அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் ஆகஸ்ட் மாதம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

திரு. கிறிஸ்ரி அருள் அவர்களின் ஊறணி பவுண்டேசன் நிதியுதவியின் ஊடாக மன்னார், இலுப்பைக்கடவை தமிழ் மகாவித்தியாலயத்தை சேர்ந்த ஐந்து மாணவர்களுக்கான கல்வி உதவி அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் ஜனவரி 2020 ல் இருந்து வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் தலா ரூபா.1000.00 மாதாந்தம் கல்வி ஊக்குவிப்பு நிதியாக வழங்கப்படுகிறது. இவ் உதவி திரு. லக்ஸ்டன், ஆசிரியர் மற்றும அதிபர் இலுப்பைக்கடவை தமிழ் மகாவித்தியாலயம் அவர்களின் ஊடாக வழங்கப்படுகிறது. இம்மாணவர்கள் க.பொ.த உயர்தரம் பூர்த்தியாக்கும் வரையில் இவ்உதவி அவர்களுக்குத் தொடர்ந்து அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் பள்ளிக்குடாவைச் சேர்ந்த மீனவர்கள் 15 பேருக்கு மீன்பிடி வலைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. கொவிட் -19 எனப்படும் கொரோனா நோய்பரவலை தடுப்பதற்கான ஊரடங்கு காலப்பகுதியில் இம்மீனவர்கள் தொழில் இன்றி பாதிக்கப்பட்டிருந்தனர். ரூபா. 106,200 பெறுமதியானமீன்பிடிவலைகள் 25-06-2020 அன்று இவர்களுக்கு வழங்கப்பட்டன. பூநகரிப் பங்குத்தந்தையும் அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தின் இயக்குநருமான அருட்தந்தை கி.ஜோ. ஜெயக்குமார் அவர்களின் வேண்டுகோளுக்கு அமைய Dr. A.M செபஸ்ரியாம்பிள்ளை (கொழும்பு) மற்றும் கிறிஸ்ரி அருள் (பிரான்ஸ்) ஆகியோர் இதற்கான நிதியை அனுப்பியிருந்தனர்.

கொவிட் - 19 எனப்படும் கொரோனா பாதிப்பினால் வேலைவாய்ப்பின்றி சுனாமிபுரம், பூநகரியில் உள்ள 75 வறிய குடும்பங்களுக்கு அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் உலர் உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டது. இதற்கான நிதிஉதவியாக ரூபா.75,000.00 கனடாவில் வசிக்கும் திருமதி கோபி சாந்தி அவர்களால் வழங்கப்பட்டது.

திரு. கிறிஸ்ரி அருள் அவர்களின் ஊறணி பவுண்டேசன் நிதியுதவியின் ஊடாக பூநகரி பிரதேசத்தில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 100 குடும்பங்களிற்கான உலர் உணவுப்பொதிகள் ஏப்ரல் மாதம் வழங்கப்பட்டன. இவை கொவிட்19 கொரொனா வைரஸ் பரவலின் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டத்தின் காரணமாக வேலை வாய்ப்பின்றி வருமானம் இன்றி தவித்த குடும்பங்களுக்கு அருட்தந்தை கி. ஜோ. ஜெயக்குமார் பங்குத்தந்தை, பூனகரி மற்றும் அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தின் இயக்குனர் அவர்களினால் வழங்கப்பட்டன. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

# இலங்கையிலும் குறிப்பாக யாழ்ப்பாண மறை மாவட்டத்திலும் அன்பியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

## ஒரு வரலாற்று நோக்கு



### அருட்தந்தை. ம.வி.இ. ரவிச்சந்திரன்

**யாழ். மறைமாவட்டத்திலே சிறிய கிறிஸ்தவ குழுமவாழ்வு**

ஏற்கனவே பார்த்தது போல இலங்கைத் திருச்சபையில் இக்குழுமவாழ்வு அறிமுகப்படுத்தப்பட்டதன் தொடர்ச்சியாகவே யாழ். மறைமாவட்டத்திலும் இது அறிமுகப்படுத்தப்பட்டது. முதலாவது முயற்சியில் 1980இல் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடாத்தப்பட்ட பிறேசிலைச் சேர்ந்த யோசே மறைன் குழுவினரின் பயிற்சியையும் அவர்களுடைய 'Church from the Roots' என்கின்ற நூலை அருட்பணி. பயஸ் தமிழில் மொழிபெயர்த்ததையும் தவிர வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல் இல்லை.

1995ம் ஆண்டு கண்டி லேவல்ல தியான இல்லத்தில் நடைபெற்ற ஆசியாவுக்கான ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறையின் அறிமுகக் கருத்தரங்குகளின் தொடர்ச்சியாகவே யாழ். மறைமாவட்டத்தில் இம்முயற்சி முறையாக முன்னெடுக்கப்பட்டது. இக்கருத்தரங்குகளில் யாழ் மறைமாவட்டத்திலிருந்து ஐந்து அருட்பணியாளர்கள் கலந்து கொண்டனர். அருட்பணி.ப.இருதயதாஸ், அருட்பணி. ம.யேசுரட்ணம், அருட்பணி.இ.ஸ்ரலின், அருட்பணி. ஜோண் லொறட் மற்றும் அருட்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன் ஆகியோரே இந்த ஐவராவர். இவர்களுள் அருட்பணி க.ஜோண் லொறட் 1996 ஆரம்பத்திலேயே மரணமானார். அருட்பணி. இ.ஸ்ரலின் அவர்கள் உளவளத்துணை துறையினுள் பிரவேசித்ததால் இப்பணியிலிருந்து ஒதுங்கிக்கொண்டார். ஏனைய மூவரும் இன்றுவரை இப்பணியில் இணைந்துள்ளனர். 1995 ஆம் ஆண்டு பயிற்சியின் பின் இக்குழுவினர் ஆர்வத்தோடு சிறிய கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்க முன்வந்தாலும் போர்ச் சூழல் காரணமாக ஏற்பட்ட விளைவுகள் பெரும் தடைகளாக அமைந்திருந்தன. 1994 இல் கூடிய யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு. 1995 நடைபெற்ற தேசிய மேய்ப்புப்பணி மாநாடு என்பன இக்குழும வாழ்வைப் பரிந்துரைத்த நிலையில் தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்ட பின்னணியில் மிக விரைவாகப் பரவியிருக்க வேண்டிய மேற்படி இயக்கம் குறிப்பாக 1995 அக்டோபரில் ஏற்பட்ட மாபெரும் வலிகாம இடப்பெயர்வு காரணமாகப் பெரும் பின்னடைவைச் சந்தித்தது. யாழ். மறைமாவட்டம் முழுவதும் இந்த இடப்பெயர்வால் பாதிப்படைந்தது. ஒரு பகுதியிலிருந்து மக்கள் வெளியேறித் தற்காலிகமாக வேறு பகுதிகளில் குடியேறிய பின்னணியில் 1997ம் ஆண்டு வரை சிறிய கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்கும் முயற்சி எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

ஆயினும் 1997ம் ஆண்டிலிருந்து மறைக்கோட்டங்கள் தோறும் கருத்தமர்வுகள் நடாத்தப்பட்டு ஊக்குவிப்பாளர்கள் உருவாக்கப் பட்டார்கள். பங்குகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டு இவ்வாறு பயிற்றப்பட்டவர்களின் உதவியோடு பங்குத்தந்தையர்கள் இக்குழுமங்களைத் தமது பங்கில் ஆரம்பிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. பங்குத்தந்தையர்களுக்குப் போதிய அறிமுகமும் ஊக்குவிப்பாளருக்கு போதிய பயிற்சிகளும் இல்லாத நிலையில் இந்த அணுகுமுறை பாரிய வெற்றியைத் தரவில்லை. இதே காலகட்டத்தில் 2000ம் யூபிலி ஆண்டுக்கு பங்குகளை ஆயத்தம் செய்யும் நோக்கில் அமலமரித் தியாகிகள் சபை குருக்களினால் நடாத்தப்படும் மகா ஞான ஒடுக்கம் என்னும் நம்பிக்கை ஆழப்படுத்தும் செயற்திட்டத்தை பல பங்குகள் முன்னெடுத்தன. ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் நடைபெறும் இத்திட்டத்தின் பகுதியாக அவர்களும் பங்குகளைச் சிறிய குழுக்களாக பிரித்து அவர்களுக்கு 'ஏழுபடி நற்செய்தி பகிர்வு' முறையை அறிமுகப் படுத்தினர். பின்பு அவர்களைக் குழுமங்களாக இயங்கப் பணித்தனர். இவ்வாறு இக்காலப்பகுதியில் அறிமுகப்படுத் தப்பட்ட குழுமங்கள் விரைவில் இயங்க ஆரம்பித்தன. ஆயினும் நீடித்த பயனைத்தரவில்லை. ஒருபுறம் போர் ஏற்படுத்திய தாக்கங்களும் மறுபுறம் போதிய ஆயத்தங்களின்றி அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டதும் இக்காலகட்டத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகள் நீடித்த பெறுபேறுகளைத் தராததிற்கு முக்கிய காரணம் என இக்காலத்தில் மறைமாவட்டக் குழுவை வழிநடத்திய அருட்பணி. ப.இருதயதாஸ் அவர்கள் மீளாய்வுச் சந்திப்பு ஒன்றிலே கருத்து வெளியிட்டார்.

1995இலிருந்து 2000 ஆண்டுவரை மறைமாவட்ட குழுவை வழிநடத்திய அருட்பணி.பி. இருதயதாஸிடம் இருந்து 2001 இல் இப்பணியை அருட்பணி சார்ள்ஸ் கொலின்ஸ் அடிகளார் எடுத்துக்கொண்டார். 2004ம் ஆண்டுவரை மறைமாவட்டக்குழுவை வழிநடத்தி குழுமவாழ்வு முன்னெடுப்புக்களை மேற்கொண்டார். இக்காலத்தில்தான் சிறிய கிறிஸ்தவ குழுமத்துக்கான மறைமாவட்ட ஆணையம் ஏற்படுத்தப்பட்டு பணியகமும் ஆரம்பிக்கப்பட்டது. குருக்கள் துறவியர். பொதுநிலையினர் அடங்கிய குழுவினர் இயக்குநரின் வழிகாட்டலில் பங்குகளைச் சந்தித்து குழுமங்களை ஊக்குவித்து வந்தார்கள். பங்குகளில் ஊக்குவிப்பாளராக செயற்படுவோருக்கான சில பயிற்சிகளும் இக்காலத்தில் நடாத்தப்பட்டதாக அருள்பணி. சார்ள்ஸ் கொலின்ஸ் குறிப்பிடுகிறார். ஆரம்ப காலமாக இருந்ததனால் குழுக்கள் பெரிய முன்னேற்றங்களை காட்டவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அருட்பணி. ம.யேசுரட்ணம் அவர்கள் 2004ம் ஆண்டின் சிறிய கிறிஸ்தவ குழுமங்களுக்கான ஆணையத்தின் இயக்குநர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இரண்டு வருட மேற்படிப்புக்கான இடைவேளையின் பின் ஆய்வாளரும் இணைந்து கொண்ட நிலையில் சிறிய கிறிஸ்தவ குழும வாழ்வின் நிலையை அறிவதற்கான மீளாய்வுக் கூட்டமொன்று 2004ம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் நடாத்தப்பட்டது. பங்குத்தந்தையருக்கு இயங்கும் குழுமங்களின் பிரதிநிதிகளை அனுப்புமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டு வந்தவர் களோடு மீளாய்வு மேற்கொள்ளப்பட்ட நிலையில் சில தேவைகள் அடையாளம் காணப்பட்டன. ஏற்கனவே குழுமங்கள் இயங்கும் பங்குகளைச் சந்தித்து தொடர்பயிற்சியும் உற்சாகமும் கொடுப்பது, இன்னும் ஆரம்பிக்கப்படாத பங்குகளைச் சந்தித்து உருவாக்குவது என்பன முக்கியமானவைகளாக அடையாளம் காணப்பட்டன. அதற்கு அவசியமாக ஒரு மறைமாவட்ட ரீதியிலான வளவாளர் குழு உருவாக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.


1995ம் ஆண்டு கண்டியில் ஆரம்பக் கருத்தமர்வில் பங்குபற்றியிருந்த அருட்பணியாளர்கள் மூவரும் தாம் பணியாற்றிய பங்குகளிலே சிறிய கிறிஸ்தவ குழுமங்களை சிறப்பாக அமைத்திருந்தனர். அந்த வகையில் அருட்பணி. ப.இருதயதாஸ் அடிகள் பருத்தித்துறைப்பங்கிலும் அருட்பணி. ம.யேசுரட்ணம் அவர்கள் அச்சுவேலி, கரவெட்டி, பண்டத்தரிப்பு ஆகிய பங்குகளிலும் அருட்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன் அவர்கள், பாண்டியந்தாழ்வு, சாவகச்சேரி, நாவாந்துறை ஆகிய பங்குகளிலும் சிறப்பான குழுக்களை உருவாக்கியிருந்தனர்.

*(தொடரும்...)*




---

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி



**நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்த தன் பின்பு, பெரும்பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.**

***- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்***

**1.6 திருஅவை எப்பொழுதும் சீர்திருத்தப்பட வேண்டும்** (church must be always reformed)

ஆனால் திருஅவைகள் தெய்வீக பிரசன்னத்தைக் கொண்ட மனித அமைப்பு (human institution containing divine presence) மனிதர் தனியாகவும் கூட்டாகவும் தங்களுடைய காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ற தெய்வீக ஆவியை உள்வாங்கி வார்த்தையாலும் அருட் சாதனங்களினாலும் ஊட்டம் பெற்று பணிபுரியும் நிலையில் இருக்க வேண்டும். அதற்காகவே திருஅவை இவ்வுலகில் இருக்கின்றது.

இச்சீர்திருத்தத்தை ஆங்கிலத்தில் Reform என்கின்றனர். அதைப் பிழையாக re+form என்ற விளக்கத்தில் முன்னிருந்த நிலைக்குத் திரும்பிச் செல்வதாகக் கருதக்கூடாது. ஆங்கில சொல் கிரேக்க metaphorein என்ற சொல்லிலிருந்து உருவத்தை மாற்றுவது என்று பொருள்படும். ஆகையினால்

சீர்திருத்தம் என்று நாம் கூறுவது முந்திய நிலைக்குத் திரும்புவது அல்ல மாறாக கிறிஸ்தவத்தை நிகழ் காலத்திலும் வருங்காலத்திலும் செயற்படக் கூடியதாக (futurable) மாற்றுவதாகும்.

இதற்காகவே கிறிஸ்தவத்தின் ஊற்று நிகழ்வுகளை மீளவும் ஆழமாகப் புரிந்து கொண்டு வரலாற்றில் இடம் பெற்ற தவறுகளைக் களைந்து இன்றைய உண்மையான சூழலுக்கும் சவால்களுக்கும் பொருத்தமான முறையில் திருஅவையை அமைப்பது அவசியம்.

இப்பேர்ப்பட்ட சீர் திருத்தம் 20ஆம் நூற்றாண்டு வரலாற்றில் திருஅவையில் இடம் பெறவில்லை. முதலாவது ஜெருசலேம் சங்கத்தைத் தவிர மற்றவை அனைத்தும் விசுவாசக் கோட்பாட்டை நிர்ணயிப்பதிலும் அவைகளுக்கெதிராக எழுப்பப்படும் கொள்கை களைத் தண்டிப்பதிலும் திருஅவை பிளவு-படுவதை ஒழுங்கு செய்யவே நடத்தப்பட்டன.

**1.7 16ஆம் நூற்றாண்டின்பின் தோன்றிய திருஅவைகளில் சூழலுக்கேற்ற மாற்றங்கள் செய்யப்படவில்லை.**

திருஅவை உரோமைத் தலைமைத்துவத்தின் கீழ் வளர்ந்து கொண்டு போகையில் அமைப்பிலும் அதன் அதிகார முறைகளிலும் பல இன்றியமையாத மாற்றங்கள் நடந்தேறின. விசேடமாக யூதேயாவில் உதித்த கிறிஸ்தவத்தின் ஆரம்ப விசுவாசக் கோட்பாட்டை உரோமைத் தலைமைத் துவத்தின் கீழ் கிரேக்க மெய்யியல் - ஐரோப்பிய இறையியல் வழியாகக் கட்டுப்படுத்திப் பாதுகாப்பதற்காக எடுத்த கடும் நடைமுறைகளில் பல பிழைகளும் ஏற்பட்டிருக்கின்றன.

இப்படியாக 16ஆம் நூற்றாண்டுவரை ஐரோப்பிய நாடுகளில் மாத்திரம் வளர்ந்த திருஅவைகள் தென் அமெரிக்கா - ஆபிரிக்கா - ஆசிய நாடுகளிலும் அதே உருவத்திலும் விசுவாசக் கோட்பாட்டுடனும் நாட்டப்பட்டன. (transplanting European churches on alien/ Asian soil) இவைகள் 300 ஆண்டுகளுக்குமேல் ஐரோப்பியக் கண்ணோட்டத்துடன் உரோமையினால் நடாத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில்தான் - ஓர் உலக ஆயர் சங்கம் - 2ஆம் வத்திக்கான் சங்கம் கூடி இவ்அந்நிய நாடுகளின் தற்போதைய சூழலை மாத்திரமல்ல முழு உலகில் மாறி வரும் நிலைகளையும் கணிக்கவும் பெரும் மாற்றங்களை முன் மொழிந்து சங்க ஏடுகளாகத் துணிந்து பிறப்பித்திருக்கின்றது.

**1.8 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் துணிச்சலும் ஆர்வமும் நீடிக்கவில்லை! இருந்தும் தொடர்ந்தன சீர்திருத்த முயற்சிகள்**

இந்த நூற்றாண்டுகளில் உலகத் திருஅவைகளைக் காலத்திற்கேற்பப் புதுப்பிக்க நாம் பெற்ற பரிசுத்த ஆவியின் கொடை 1962-65 நடந்தேறிய 2ஆம் வத்திக்கான் சங்கம் ஆகும். அச்சங்கம் எமது திருஅவைகளுக்குப் பொருத்தமான முக்கிய அறிவுரைகளை வழங்கி இருக்கின்றது. இவைகளை நிறைவேற்றிய சங்கபிதாக்களும் இறையியலாளரும் வீடு திரும்பினர்.

*(தொடரும்...)*

# காவலன் கலசம்

# ஒரு அதிசய தாரகையின் பயணம்!

**எதிர்வரும் வைகாசி 15ஆம் திகதி முத்திப்பேறுபட்டம் பெறும் இறை மீட்பர் சபையின் ஸ்தாபகர் வணக்கத்திற்குரிய பிரான்சிஸ் ஜோர்டனின் வாழ்க்கைக் கண்ணோட்டம்**

பூமி பிரபஞ்சத்தில் அதிசய தாரகைகள் தோன்றுவதும் மறைவதும் ஓர் அரும் அடையாளங்களாக இருந்து வருகின்றது. அதுபோலவே கடவுளின் மீட்புப்பயணத்தில் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் காலத்தினுடைய தேவைகளுக்கேற்ப கடவுளால் இவ்வுலகிற்கு அனுப்பப்படுவதும் உண்மையே! இதற்கு இணங்க ஆனித் திங்கள் 16 ஆம் நாள் 1848 ஆம் ஆண்டு ஜேர்மனியிலுள்ள குருட் வெய்ல் என்னும் சிறிய கிராமத்தில் ஏழைக் குடும்பமான லோரன்ஸ் ஜோர்டான் மற்றும் நோர்வுக்கா பீற்றர் என்னும் கிறிஸ்தவ கத்தோலிக்க தம்பதிகளுக்கு இளைய மகனாக மண்ணில் தவழ்ந்தவர் தான் பிரான்சிஸ் ஜோர்டான் என்னும் அதிசய தாரகை.

இவர் பிறந்து மறுதினமே கடவுளின் குழந்தை ஆகும் வரத்தைப் பெற்றார். அப்போது அவருக்கு வழாங்கப்




பட்ட நாமம் ஜோன் பப்ரிஸ்ற் ஜோர்டான். இக்குடும்பம் கிறிஸ்தவ விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றியிருந்த போதும் பொருளாதார, சமூக, கலாசார சுமைகளினால் பல விதத்தில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இச்சூழ்நிலையில் ஜோன் பப்ரிஸ்ற் ஜோர்டான் தன்னை முதன்முறையாக நற்கருணை ஆண்டவரைப் பெறுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிந்தார். இவர் இதைப் பெறுவதற்கு பல வகைகளில் தன்னை ஆயத்தம் செய்தார். இதற்கு இவருடைய பிற்பட்ட வாழ்வு சாட்சி பகிர்கின்றது. இவர் சித்திரைத் திங்கள் 07 நாள், 1861 இல் முதன் முறையாக நற்கருனை ஆண்டவரைத் தனது உள்ளம் என்னும் ஆலயத்தில் வரவேற்றார். அன்றிலிருந்து அவர் தனக்குள் பலமாற்றங்கள் ஏற்பட்டதை உணர்ந்து கொண்டார். குறிப்பாகக் கூடுதலான நேரங்கள் செலவிட்டு வேதாகமம் வாசிப்பதிலும் தியானிப்பதிலும் இன்னும் புனிதர்களுடைய வாழ்க்கை வரலாறை வாசிப்பதிலும் தனது வாழ்க்கையை அர்பணித்தார். இவருடைய வாழ்க்கை மாற்றத்தை கண்கூடாகப் பார்த்து அவதானித்தவர்கள் ஆச்சரியப்படும் வண்ணம் இவர் மக்களுக்கு இறை அனுபவத்திலும் பக்தியிலும் முன்மாதிரியாக நன்மதிப்புடன் சமுதாயத்தில் வாழ்ந்து வந்தார்.

ஒருபுறத்தில் குடும்ப கஷ்டங்களை நன்கு அறிந்த ஜோன் பப்ரிஸ்ற் ஜோர்டன் தன்னுடைய சிறுபராயத் திலே- யே குடும்பத்தின் பொருளாதார பெறுப்பை ஏற்றுக்கொண்டு சிறிய காலம் வர்ணம் தீட்டுபவராகவும் சிறிய காலம் புகையிரத நிலையத்தில் கூலிவேலை செய்பவராகவும் எப்படியெல்லாம் குடும்ப பொருளாதாரத்தை நிவர்த்தி செய்ய முடியுமோ அப்படியெல்லாம் தனது திறமையைப் பயன்படுத்தி பொருளாதாரத்தில் குடும்பம் எதிர்நோக்கிய சவால்களை அன்றாடம் நிவர்த்தி செய்து வந்தார்.

மறுபுறத்தில்இறைவன்தன்னைஅவருடையபணியைத் தொடர அழைப்பதாக உணர்ந்து கொண்டார். அதற்கான வழிகளை ஜோன் பப்ரிஸ்ற் ஜோர்டன் நாளும் பொழுதும் தியானித்ததோடு அதற்கு ஏற்ப தன்னுடைய வாழ்வையும் வாழப்பழகிக்கொண்டார். அதற்கான முதல்படியாக அருட்தந்தை வேவர் அவர்களைச் சந்தித்து அறிவுரைகளைப் பெற்றுக்கொண்டார். இவருடைடய பொருளாதார நெருக்கடிகளை நன்கு அறிந்து கொண்ட அருட்தந்தை அவர்கள் தன்னுடையபாதுகாப்பில்இவருக்குதேவையான அடிப்படை மொழி அறிவியல் மற்றும் மறைக்கல்விகளை அவருக்கு நன்கு புரியும் வண்ணம் தெளிவுபடுத்தினார். அருட்தந்தை வேவரினுடைய பரிந்துரைக்கு அமை- வாக 1874 ஆம் ஆண்டின் இறுதியில் ஜோன் பப்ரிஸ்ற் ஜோர்டன் தன்னுடைய இறையியல் படிப்பிற்காக பிறிபேர்கிலுள்ள பாடன் பல்கலைகழகத்தில் இணைந்து 1877 ஆம் ஆண்டு அவரினுடைய கற்கைகளை நிறைவு செய்தார். அதன் பின் புனித பேதுருவானவர் உயர்குரு மடத்தில் சேர்ந்து ஆடித் திங்கள் 21 ஆம் நாள் 1878 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

அக்காலத்தில் ஜேர்மனியில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக அருட்தந்தை ஜோர்டான் தன்னுடைய முதல் திருப்பலியை தன்னுடைய சொந்த பங்கில் நிறைவேற்றமுடியாதசூழ்நிலைக்குத்தள்ளப்பட்டார். இதன் காரணமாக அவருடைய ஆயர் அவரைப் பிறமொழிகள் படிப்பதற்காக உரோமாபுரிக்கு 1878 ஆம் ஆண்டு அனுப்பி வைத்தார்.

அவர் தன்னுடைய கற்கை நெறியை சாந்தோ கம்போ என்ற பெயரில் இயங்கி வரும் ஜேர்மன் கல்லூரியில் கற்றார். இவ்வேளையில் அருட்தந்தை ஜோர்டன் அவர்கள் கடவுளுடைய அழைப்பு என்னவென்று ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினார். சில வேளைகளில் கடவுள் தன்னை ஓர் கருவியாகப் பயன்படுத்தி இறைமக்களை அவர் பக்கம் ஒன்று திரட்ட தன்னை அழைப்பதாக உணர்ந்து கொண்டார். ஆனால் அவருடைய மனித பலவீனமும் இயலாமையும் பல தடவைகளில் அவருடைய வாழ்க்கையில் சோதனையாகத் தடைக்கற்களாக இருந்ததை உணர்ந்தார்.

அக்காலத்தில் அவர் தன்னுடைய சக குருக்களோடு ஒன்று சேர்ந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு யாத்திரையாகப் புனித பயணம் ஒன்றை மேற்கொண்டார். இறைமீட்பர் மண்ணில் அவதரித்த போது அவர் தடம்பதித்த இடங்கள் எல்லாவற்றையும் தரிசித்துத் தன்னுடைய விசுவாசத்தை ஆழப்படுத்திக் கொண்டார்.

அவ்வேளை அருட்தந்தை ஜோர்டன் அவர்கள் ஜெருசலேமிலுள்ள இறைமீட்பரினுடைய வெறுமையாக்கப்பட்ட கல்லறையையும் தரிசித்தார். அது அவருக்கு இறைபணியை முன்னெடுப்பதற்கு உத்வேகத்தையும்

**அருட்பணி டேமியன் ராஜ பீறிஸ் SDS**
**அகில இலங்கைக்கான**
**இறை மீட்பர் சபை இணைப்பாளர்.**

உற்சாகத்தையும் கொடுத்தது. இத்தருணத்தில் தூய ஆவியானவர் இறைவார்த்தை ஊடாகப் பேசியதை உணர்ந்து கொண்டார். அதை அவர் தன்னுடைய ஆன்மீகப் புத்தகத்தில் குறிப்பிட்டும் உள்ளார். நிலை வாழ்வு என்பது "உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவை அறிவதுமே நிலைவாழ்வு" (யோவான் 17.3.) என்ற இறைவனின் உயிரிள்ள வார்த்தையால் ஈர்க்கப்பட்டார். இவ்வார்த்தை இவருடைய கனவை நனவாக்க பல வழிகளில் உந்து சக்தியாக இருந்ததை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. புனித யாத்திரையை ஆன்மீக முறையில் நிறைவு செய்த அருட்தந்தை அவர்கள் 1881 மார்கழி திங்கள் 08 ஆம் நாள் அன்னை மரியாளினுடைய மாசில்லாமல் உற்பவித்த அமல உற்பவ திருவிழா அன்று உரோமையிலுள்ள புனித பிரியிற் அம்மாள் சிற்றாலயத்தில் அப்போஸ்தலர்களின் வழியில் கற்பிக்கும் சபை (Apostolic teaching society) என்ற பெயரில் புதிய துறவற சபையை ஸ்தாபித்தார். ஏழு வருடங்கள் பின்னர் 1888 இல் அதே பெயரில் அருட் சகோதரிகளுக்கான துறவறசபையையும் ஸ்தாபித்தார். அருட்தந்தை ஜோர்டன் அவர்கள் அகில திருச்சபை கற்பிப்பதை போதிக்கவும் அதை பாதுகாக்கவும் தன்னுடைய வாழ்வை முழுவதுமாக அர்பணித்தவர். அவர்களினுடைய வேண்டுகோளிற்கிணங்க 1893 ஆம் ஆண்டு தன்னுடைய சபையின் பெயரை "இறைமீட்பர் சபை" (The Society of the Divine Saviuor) என்று மாற்றிக்கொண்டார். அன்றிலிருந்து இன்றுவரை இச்சபை இப்பெயரிலேயே அழைக்கப்படுகின்றது. இவ்வாறு தன்னுடைய பணியை இறை நம்பிக்கையிலும் இடைவிடாத செபத்திலும் இறைமீட்பரினுடைய வாழிகாட்டலிலும் நளாந்தத் திருப்பலிகொண்டாட்டத்திலும்வேரூன்றி உறுதியான ஒரு மறைபரப்பு சபையாக இவ்வுலகில் மிளிரச் செய்தார். அவருடைய காலத்தில் முதலாவது மறைபரப்புப் பணியை வடமேல் இந்தியாவிலுள்ள அஸ்ஸாம் (Assam) என்னும்இடத்தில்ஸ்தாபித்தார்அதனைதொடர்ந்துசீனாவிலும், ஆபிரிக்காவிலும், வடகிழக்கு அமெரிக்காவிலும் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும் மறையைப் பரப்புவதற்கு உந்து சக்தியாக இருந்தார்.

1915ஆம் ஆண்டு ஏற்பட்ட முதலாவது உலகப் போர்த் தாக்கம் காரணமாக சபையின் தலைமை நிர்வாகமானது உரோமாபுரியிலிருந்து சுவிஸ்லாந்திற்குக் கட்டாயமாக இடமாற்றம் செய்யப்படவேண்டியிருந்தது.

அவ்வேளை அருட்தந்தை ஜோர்டன் அவர்களும் உடனிருந்த அருட்சகோதரர்களும் சுவிஸ்லாந்திற்கு பயணமானார்கள். அருட்தந்தை ஜோர்டன் தனது மண்ணக வாழ்வின் இறுதி மூன்று ஆண்டுகளை ரபர் (Tafers) என்னும் சிறிய கிராமத்தில் வாழ்ந்து மரியன்னையினுடைய பிறந்த தினமான புரட்டாதி 08ஆம் நாள் 1918ஆம் ஆண்டு அன்று இறைபதம் அடைந்தார். இவருடைய உடலானது சுவிஸ்லாந்தில் உள்ள ரபர் பங்கு ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது. பின்னர் 1956 ஆம் ஆண்டு அவருடைய உடலானது சபையின் தலைமை நிர்வாகம் அமைந்துள்ள உரோமாபுரிக்கு இடம்மாற்றபட்டது.

"அந்த எதிர்நோக்கு ஒரு போதும் ஏமாற்றம் தராது ஏனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது" (உரோ 5:5). இவ் இறை வார்த்தைக்கு இணங்க இறைமீட்பர் சபையினர் விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் நீண்ட நாட்களாக ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த அதிசய தாரகை வணக்கத்திற்குரிய பிரான்சிஸ் ஜோர்டனின் விண்ணோக்கிய பயணமானது 2020 ஆனி திங்கள் 19ஆம் நாள் பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் அகில திருச்சபை வணக்கத்துடன் போற்றும் வண்ணம் முத்திப்பேறு பட்டம் அளிப்பதற்கு அதிகார பூர்வமாக புனித பேதுருவானவர் பேராலய முன்றலில் அறிவிக்கப்பட்டது. இந்தத் திருச்சடங்கனது இவ்வருடம் 2021 வைகாசி திங்கள் 15 ஆம் நாள் பாப்பிறை ஜோன் லத்திறன் பேராலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வரலாற்று சிறப்பு மிக்க புனித நிகழ்வானது இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் பணிபுரியும் இறை மீட்பர் குடும்பத்தினருக்கு இறை பணியில் உற்சாகத்தையும் திடத்தையும் கொடுக்கின்றது. இந்நந்நாளில் அதிசய தாரகையின் கனவு நனவாக இறைமீட்பர் குடும்பத்தில் இணைந்து இறையரசை கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்று திரள்வோம். முத்தி பெறுபெற்ற பிரான்சிஸ் ஜோர்டன் உங்கள் அனைவருக்காகவும் பரிந்து பேசுவாராக.

## திருவிவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 02

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | 3 | |
| | ■ | 4 | | | 5 | | ■ |
| | 6 | | | | | | 7 |
| | | 8 | | 9 | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| ■ | | | | | ■ | | |
| 10 | | | | | ■ | | |

**இடமிருந்து வலம்:**

1.வானத்துப் பறவைகளை நோக்குங்கள் அவைகள் இங்கெல்லாம் சேர்த்து வைப்பதில்லை (8 எழு.)

4. இது மெய்யானது என்பதற்கு அதை ஏற்றுக் கொண்டவரின் செயல்களே சான்று. (3 எழு)

6. உலகத் தேற்றம் முதல் மறைந்திருந்தவற்றை இறவாக்கினர் இவ்வாறு செய்தது நிறைவேறியது (5 எழு)

10. மண்ணுலகில் உங்கள் செல்வத்தை இவ்வாறு வைக்க வேண்டாம். (4 எழு.)

**மேலிருந்து கீழ்**

1. இயேசு தொழுகைக் கூடங்களிலும் இதனைச் செய்தார் (6 எழு)

2. இயேசு: வரப்போகும் இதிலிருந்து த ப்பித்துக் கொள்ளச் சொன்னவர் யார் (8 எழு)

3. இறைவாக்க நூல்களும் இதுவும் யோவான் வரும்வரை இறைவாக்கு உரைத்தன (8 எழு)

5. இயேசுவை எதிர்த்த இவர்களின் போதனைகள் பற்றி எச்சரிக்கையாய் இருக்கும்படி கூறினார் (5 எழு.)

6. அவர்கள் கண்டும் காண்பதில்லை. கேட்டும் புரிந்து கொள்ளாததால் இதன் வாயிலாகப் பேசுகிறேன் (எழு)

7. வீட்டுத் தலைவனையே இவ்வாறு அழைப்பவர், வீட்டாரை இன்னும் தரக்குறைவாகப் பேசமாட்டார்களா? (6 எழு)

8. ஆண்டவரே தாவீதின் மகனே என்ற கத்தியவர்களின் குரலைக் கேட்ட இயேசு நின்று இதனைத் தொட்டார் அவர்கள் குணம் பெற்றனர். (5 எழு.)

9. இயேசு தம் சார்பாகவும் பேதுருவின் சார்பாகவும் வரியைச் செலுத்தும்படி சொன்ன நாணயம் (5 எழு.)

ஆசிரியர்
புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்
360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
08 . 12 . 1919



ஆண்டவன் அடியில்
26 . 04 . 2020

அமரர்
### அருட்பணி மாஷேல் மரியதாஸ் இராஜநாயகம்
(முன்னாள் பதுளை மறைமாவட்டக் குருமுதல்வர்)

தந்தையே தனித்திருந்து தனியே
தரணியை விட்டுச் சென்றாயே
தயவாய் உம்மை வேண்டுகின்றோம்
இறை பணியை நிறைவேற்றி
இன்பமுடன் வாழ்ந்ததுபோல்
விண்ணகத்திலும் வீற்றிருந்து
பாவிகள் எமக்காய் மன்றாடும்
மறைந்த ஓராண்டில் உம்
உறவுகள் அஞ்சலி செலுத்துகின்றோம்

மிருசுவில்

இவரின் பிரிவால்
துயருறும்
உறவுகள்

AD-41

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
16 . 10 . 1935



ஆண்டவன் அடியில்
22 . 03 . 2021

### திருமதி ராணி ஒலிவர் நீற்றா அரசநாயகம்
("ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது")

பொறுமையின் சிகரமே எங்கள் பொக்கிசமே
போய்விட்டாய் எம்மை விட்டு
விண்ணக வான் வீட்டை எண்ணியே
விமலனிடம் நித்தமும் வேண்டி நின்றாய்
நிம்மதியாய் இறக்க வேண்டும் என்று
நினைத்தபடியே நொடியில் சென்று விட்டாய்

மிருசுவில்

குடும்பத்தினர்

AD-40

## விண்ணக வாழ்வின் முதலாம் வருட நினைவஞ்சலி

மண்ணில்
29 . 11 . 1939







விண்ணில்
05 . 05 . 2020

### திருமதி சிசிலியா தார்சீசியஸ் (பபா)

" உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான் 11:25)

ஓராண்டு அல்ல பல ஆண்டுகள் கடந்தாலும் உம்முகம் எம்மனதை விட்டகலுமோ அம்மா
உம் பாசமழையில் நனைந்து வளர்ந்தோம் அம்மா
துன்பத்தை நாம் உணராதிருக்க சுமைதாங்கியாய் இருந்தாய் அம்மா
உம் தோள் மீது சாய்ந்து நாங்கள் துயில் கொள்ள
நினைத்தது கனவாகிப் போய்விட்டதே
தினமும் உம் நினைவில் தவித்துக் கொண்டிருக்கின்றோம்
நெஞ்சம் வலிக்கின்றதே அம்மா
அம்மா நீங்கள் என்றும் அமைதிபெற்று வாழ்ந்திட
தினமும் எமது செபத்தில் வேண்டுகிறோம் அம்மா. அம்மா

**இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 05.05.2021 புதன்கிழமை தெகிவளை புனித மரியாள் ஆலயத்திலும், கல்கிசை புனித அந்தோனியார் ஆலயத்திலும், யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்திலும் காலை 6.00 மணிக்கும், யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் காலை 5.30 மணிக்கும் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

*92 A கல்விகார வீதி,
தெகிவளை.*

*இவரின் பிரிவால் நினைந்துருகும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

AD89

## யுவதிகளுக்கான பயிற்சிநெறி

கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ள அப்போஸ்தலிக்க கார்மேல் துறவறசபைச் சகோ தரிகளால் நடாத்தப்படும் யுவதிகளுக்கான பயிற்சிநெறி. இப்பயிற்சிநெறி இவ்வருடம் வைகாசி மாதம் 3ம் திகதியிலிருந்து ஆடி மாதம் 31 ஆம் திகதி வரை நடைபெறும்.

### (03.05.2021- 31.07.2021)

க.பொ.த.பரீட்சை முடித்த மாணவிகளுக்கு அச்சுவேலி கார்மேல்மடத்தில் நடைபெறும். விடுதிவசதி தேவைப்படும் மாணவிகளுக்கு வசதிகள் வழங்கப்படும். ஒருமாத விடுதிக்கட்டணம் 4000X3 = 12000

**கணினி, ஆங்கிலம், வாழ்க்கைத்திறன் ஆளுமைவளர்ச்சி உள்ளடங்கிய கற்கைநெறிகள்.**

- ஆங்கில இலக்கணம் (எழுத்து உரையாடல் பாடப் பழகுதல்)
- தேசிய தொழில்சார் தகுதி முறைமைக் கணினி.
- சிங்கள மொழி.
- ஆளுமை விருத்தியும் மகிழ்ச்சியான வாழ்வும்.
- மனைப்பொருளியல்.
- பெண்கள் அலங்காரம்.

அறிவைவளர்க்க, ஆளுமைவிருத்தி அடைய, தொழில்வாய்ப்புத் தேர்ச்சிகளை அடைய மிகக்குறைந்த கட்டணத்துடன் வழங்கப்படுகிறது. மூன்று மாத முழுப்பயிற்சி நெறிக்கான கட்டணம் ரூ 10000. 00 முதல் முறை வருகை தரும் போதே இக் கட்டணத்தைக் கட்டி விடவும். 28.04.2021 க்கு முன்பு தொடர்புகொண்டு பதிவைப் பெற்றுக்கொள்ளவும். விண்ணப்பப் படிவங்களை தபால்மூலம் பெற்றுக்கொள்ள பின்வரும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

அருட்சகோதரி பிறெமில்டா அ.கா.
0771735962 - 021-2058526 மடத்தலைவி,
அப்போஸ்தலிக்க கார்மேல்மடம், அச்சுவேலி.

## அழைக்கிறார் இயேசு ஆண்டவர்

இறையரசை இவ்வுலகில் கட்டியெழுப்ப "என் பின்னே வா" என இயேசு தம் பணிக்கு உன்னைப் பெயர் சொல்லி அழைப்பதை நீ உணர்கின்றாயா? அப்படியானால் யாம், அமலமரித் தியாகிகள் துறவற சபையில் இணைந்து அருட்சகோதரனாகவோ, அருத்தந்தையாகவோ பணிசெய்ய முடியும். "எளியோர்க்கு நற்செய்தி நவில" எனும் விருதுவாக்கினை நிறைவேற்ற நமது துறவற சபையின் நிறுவுனர் புனித இயூஜின் டி மசனெட்டின் வழியில் திருச்சபைக்குத் தொண்டாற்ற நாம் உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

இறை நம்பிக்கையும், நற்பண்பும் கொண்ட கல்வியை சாதாரணமாகத் தொடரக்கூடிய இம்முறை க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறக்கூடிய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

*தொடர்புகளுக்கு:* அதிபர், புனித வளனார் அ.ம.தி. குருமடம்,
சுவாமியார் வீதி, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி இல.:* 0779614671 - 021 222 5358

## பரிசுத்த ஆவியின் செபம்

பரிசுத்த ஆவியே! தேவரீர் எழுந்தருளி வாரும், பரலோகத்தில் நின்று உம்முடைய திவ்விய பிரகாசத்தின் கதிர்களை வரவிடும். தரித்திருடைய பிதாவே! கொடைகளைக் கொடுக்கிறவரே இருதயங்களின் பிரகாசமே எழுந்தருளி வாரும். உத்தம ஆறுதலானவரே, ஆத்துமங்களுக்கு மதுரமான விருந்தாளியே! பேரின்பரசமுள்ள இளைப்பாற்றியே, பிரயாசத்தின் சுகமே! வெய்யிலிற் குளிர்ச்சியே அழுகையிற் தேற்றரவே எழுந்தருளி வாரும். வெகு ஆனந்தத்தோடே கூடியிருக்கிற பிரகாசமே, உமது விசுவாசிகளுடைய இதயங்களின் உற்பன்னங்களை நிரப்பும். உம்முடைய தெய்வீகமின்றி மனிதரிடத்தில் குற்றமில்லாதது ஒன்றுமில்லை. அசுத்தமாயிருப்பதைச் சுத்தம் பண்ணும், உலர்ந்ததை நனையும், நோவாயிருக்கிறதைக் குணமாக்கும் வணங்காததை வணங்கப்பண்ணும், குளிரோடிருக்கிறதைக் குளிர்போக்கும், தவறினதைச் செவ்வனே நடத்தும், உம்மை நம்பின உம்முடைய விசுவாசிகளுக்கு உம்முடைய திருக் கொடைகள் ஏழையும் கொடுத்தருளும். புண்ணியத்தின் பேறுகளையும் நல்ல மரணத்தையும், நித்திய மோட்ச ஆனந்தத்தையும் எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

*- ஓர் அடியாள்*

## புதிய ஆயர் Carlassare
## விரைவில் நலமடைய திருத்தந்தை செபம்

தென் சூடான் நாட்டின் Rumbek மறைமாவட்டத்தில் கடுமையாய்த் தாக்கப்பட்டுள்ள கொம்போனி மறைப்பணி சபையைச் சார்ந்த, புதிய ஆயர் Cristian Carlassare அவர்கள், விரைவில் நலமடையத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறைவனை மன்றாடி வருவதாக, திருப்பீடத் தகவல் தொடர்பகத்தின் இயக்குனர் மத்தேயோ புரூனி அவர்கள் கூறியுள்ளார்.

Rumbek மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் Cesare Mazzolari அவர்கள், 2011ம் ஆண்டில் இறைபதம் அடைந்ததைத் தொடர்ந்து, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அருட்பணி Carlassare அவர்களை, இவ்வாண்டு மார்ச் மாதம் 8ம் திகதி, அம்மறை மாவட்டத்தின் புதிய ஆயராக நியமித்தார். இப்புதிய ஆயரின் திருப்பொழிவு நிகழ்வு, வருகிற மே மாதம் 23ம் திகதி நடைபெறுவதாய் அறிவிக்கப்பட்டிருந்தது.

43 வயது நிரம்பிய, இத்தாலியரான, புதிய ஆயர் Carlassare அவர்கள் அறையில், ஏப்ரல் 25 நள்ளிரவில், இரு ஆயுதம் ஏந்திய ஆண்கள் நுழைந்து அவரைக் கடுமையாய் அடித்து அவரது கால்களிலும் நான்குமுறை துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

புதிய ஆயர் Carlassare அவர்கள், தாக்கப்பட்ட தகவல் வெளியானபின், அவர் உடனடியாக, நைரோபிக்கு அழைத்துச் செல்லப் பட்டு அந்நகரில் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுவருகிறார் என்று கூறியுள்ள, புரூனி அவர் கள், புதிய ஆயர் Carlassare அவர்கள், தன்னைத் தாக்கியவர்களை மன்னித்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## அருட்தந்தை சறத்ஜீவன்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா. 121,795.00 பெறுமதியிலான உலர் உணவுப் பொருட்கள் 100 குடும்பங்களிற்கு பகிர்ந்தளிக்கப் பட்டன.

கொழும்புத்துறையைச் சேர்ந்த ரவீந்திரன் மேரி சுபதா என்பவருக்கு அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் ரூபா 18,850.00 பெறுமதியிலான துவிச்சக்கரவண்டி 19-06-2020 அன்று அன்பளிப்புச்செய்யப்பட்டது. இதற்கான நிதி உதவியை மொன்றியலை சேர்ந்தநன் கொடையாளர் வழங்கியிருந்தார்.

**நித்திலா மரியாம்பிள்ளை**

## யாழ் மறைமாவட்ட திருஅவைக்கு மூன்று புதிய அருட்பணியாளர்கள்



யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் 24.04.2021 சனிக்கிழமை அன்று நடைபெற்ற குருத்துவ திருநிலைப்படுத்தல் திருப்பலியில் யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூன்று தியாக்கோன்கள் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள். அருட்பணியாளர்களான தயதீபன், நிலான் யூலியஸ், யூட் கெமில்டன் ஆகியோரே புதிய குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டவர்களாவார்.

## நித்திய வாக்குறுதி பெறும் திருக்குடும்பக் கன்னியர்



யாழ். திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி நிறோசா பத்மசேனன் அவர்கள் தமது துறவற வாழ்வின் நித்திய வாக்குறுதியை தமது மாகாணத் தலைவி முன்னிலையிலும், யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை முன்னிலையிலும் மேற்கொண்டார்.

இத் திருநிகழ்வின் நன்றித் திருப்பலியில் குருக்கள், அருட்சசகோதரிகள், சகோதரியின் குடும்பத்தினர் இணைந்து இறைவனுக்கு நன்றி கூறினர்.



ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தில் 62 மாணவ மாணவிகளுக்கு யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் கடந்த 17.04.2021 அன்று உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது.

## புனித வின்சென் டி போல் சபையின் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு



கொய்யாத்தோட்டப் பங்கில் புனித வின்சென்ற' டி போல் சபையின் கிறிஸ்து அரசர் பந்தியின் நெறிப்படுத்தலில், பங்கு எல்லைக்குள் வாழும் சகல பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான "தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு" 07.03.2021 இல் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. க.பொ.த சா/த இன் பின் உயர்தரத்திற்குப் பாடங்களை எவ்வாறு தெரிவு செய்வது, ஒரு தொழிலை நோக்கி எப்படி முன்னேறுவது, அதற்காக அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு பாட நெறிகள், கற்கைப் பீடங்கள் போன்ற விடயங்கள் பற்றி, யாழ். கல்வி வலயத்தின் குறித்த பகுதிக்குரிய ஆலோசனை அலுவலர் திருமதி கஸ்ரன் றோய் வளவாளராகப் பங்கெடுத்துப் பயனுள்ள வகையில் வழிநடத்தினார். அன்றைய தினத்தில் கிறிஸ்து அரசர் பந்தியினைச் சந்தித்த மறைமாவட்ட வின்சன்ற் டி போல் சபையின் ஆன்ம ஆலோசகர் அருட்திரு செ. நேசநாயகம் அடிகள் மேற்படி நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்கெடுத்தார்.

## குருத்துவ வெள்ளிவிழா நிறைவில் செபமாலைத்தாசர்கள்





குருத்துவ வாழ்வின் வெள்ளிவிழாவை நினைவுகூருகின்ற செபமாலைத்தாசர் சபையின் உயர்தலைவர் அருட்பணி ஜஸ்டின் ராஜ் அடிகளாரையும் மற்றும் அருட்பணியாளர்கள் பிரான்சிஸ் ஜெயம், ஜோன் பொஸ்கோ அடிகளார்களையும் பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## அல்லைப்பிட்டியில் புதிய கன்னியர் மடம்

அல்லைப்பிட்டிப் பங்கில் புதிய கன்னியர் மடம் அமைக்கப்பட்டு மே மாதம் 1ம் திகதி யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக்கன்னியர் மடத்தில் இந்திய புனித சூசையப்பரின் குழுனி சபைக் கன்னியர்கள் பணியாற்றுவர். இப்புதிய கன்னிர்மடம் அமைவதற்கான முழு முயற்சிகளையும் யாழ் ஆயரும் மற்றும் அல்லைப்பிட்டிப் பங்குத்தந்தை அருட்பணி ம.டேவிட் அடிகளாரும் மேற்கொண்டிருந்தனர்.

## ஆனைக்கோட்டைப் பங்கின் ஆலயங்களில் அன்பிய நிகழ்வுகள்



ஆனைக்கோட்டைப் பங்கின் ஆனைக்கோட்டை, நவாலி, தேவர்கட்டு ஆலயங்களைச் சேர்ந்த அன்பியங்கள் தத்தம் பகுதிகளில் அன்பியத் திருப்பலிகளை ஒப்புக்கொடுத்து அன்பிய ஆண்டின் சிறப்பு நிகழ்வுகளையும், மிகச் சிறப்பாக நிகழ்த்தி வருகின்றனர். ஆனையூர் பங்குத்தந்தை அலின் கருணாகரன் அடிகளார் சிறப்பாக இந்நிகழ்வுகளை ஒழுங்குசெய்துள்ளார்.

## புனித வின்சென்ற் டி போல் பந்தியினால் துவிச்சக்கர வண்டி அன்பளிப்பு



முல்லைத்தீவு இராயப்பர் ஆலயத்தின் புனித வின் சென்ற் டீ போல் பந்தியினால் உறுப்பினர்கள் அனைவரும் ஏழைகளுக்கு உதவி செய்யும் நோக்குடன் கிராமத்தில் ஒவ்வொரு குடும்பத்தினரிடம் இயன்ற பண உதவியைப் பெற்று அந்நிதியிலிருந்து ரூபா. 25,000.00 பெறுமதியான புதிய துவிச்சக்கர வண்டியினை முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கைச் சேர்ந்த பெற்றோரை இழந்த முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்கும் பாடசாலை மாணவன் ஜெயராசா ஜென்சிகன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

## அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் சக்கர நாற்காலி அன்பளிப்பு



அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் நெடுந்தீவில் வசிக்கும் மாற்றுவலுவுடைய 15 வயதுச் சிறுவன் ஒருவருக்கு சக்கர நாற்காலி அன்பளிப்புச் செய்யப்பட்டது. சிறுவனின் தந்தை சக்கர நாற்காலியை 26-03-2021 அன்று மறைந்த அருட்தந்தை சறத்ஜீவன் அடிகளாரில் இல்லத்தில் வைத்து அதனைப் பொறுப்பேற்றார். இதற்கான நிதி உதவி ரூபா.23,000.00 வை கனடாவில் வசிக்கும் திரு. நிமல குமார்பாமினி தம்பதிகள் வழங்கியுள்ளார்கள்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு மே மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.